SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது விருத்தம் "

74-ம் புத்தகம் 36-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 15-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## இரும்புத்திரைக்குப் பின்

கடந்தயுத்தத்தின்பெருந்தீங்குகளில்ஒன்று, ஐரோப்பாவை இருபெரும்பிரிவாகப் பிரித்திருப்பது. அமெரிக்கா, இங்கிலாந்தைப் பின்பற்றும் மேனாடுகள், ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள பால்கன் ஆதியநாடுகள். இரண்டுக்கும் மத்தியில்இரும்புத்திரையொன்று தொங்குகிறது. திரைக்குப் பின்னால் நடக்கும்நாடகம் வெளியுலகத்திற்குப் புலப்படாது. இவ்விஷயத்தில் ருஷியா தனதுதிறமையை நன்றாய்க்காட்டியிருக்கிறது. போலாந்து, செக்கோசிலோவாகியா, யூகோசிலேவியா, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி, அல்பானியாமுதலிய நாடுகள் ருஷியாவைச் சகலத்திலும் பின்பற்றுகின்றன. இவற்றைஆளுவது ருஷியாவில்பயின்ற பொதுவுடைமைவாதிகளான சில்லறைக்கூட்டங்கள். மிகச் சிறுதொகையினரான இவர்கள் வெகுதந்திரமாய் அரசாங்கங்களைக் கைப்பற்றி, வெளியுலகத்திற்குப் பொதுசனபிரதிநிதிகள் போல் பாவனைசெய்கின்றனர். பயத்தினாலும், மிருகபலத்தினாலும் பாமரசனங்களின் வாயை மூடிவிட்டனர். ருஷியாகண்டுபிடித்துள்ள அரசியல்முறைகள்—அடிமைப்பத்திரிகைகள், வேவுக்கூட்டம், கைதிகள்முகாம், மலைப்புளுகுகள்,—எல்லாம் இங்கேயும் தாண்டவமாடுகின்றன. சர்வதேசசங்கமும், உலகமும் இவர்களின் வெளிப்பிரசாரத்தை நம்பிவிடவில்லை. ஆனால், நம்பியென்ன? நம்பாமலென்ன? பலவீனமும், சுயநலமும் மேல்நாடுகளின்எதிர்ப்பை வாயளவில் நிறுத்துகிறது

இந்த இரும்புத்திரை நாடுகளிற்சில கத்தோலிக்கநாடுகள். போலாந்து, ஹங்கேரி, செக்கோசிலோவாகியாமுதலியவை பெருவாரியாகக் கத்தோலிக்கரையுடைய தேசங்கள். எனவே, புரட்சி அரசாங்கங்களின் முதல் எண்ணம், முக்கியகவலை, கத்தோலிக்கவேதத்தை நசுக்குவதே. வெளியுலகபிரசாரத்தில், இந்நாடுகளிலெல்லாம்—ருஷியாவிலிருப்பதுபோல்!—மதவுரிமை இருப்பதாக விளம்பரஞ் செய்கின்றனர். ஆனால், முதலிலிருந்தே கொஞ்சங்கொஞ்சமாக மதவுரிமைகளையெல்லாம் பறித்துக் கொண்டனர். பலவந்தமாகக் குருமாரையும், கத்தோலிக்கரையும் பிரிவினைசபையில் சேர்க்கின்றனர். குருமடங்களையும், கன்னியர்மடங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். வத்திக்கானோடு ஒருவித உறவும் இல்லாதபடி செய்கின்றனர். ஞானகாரியங்களிலும் தாங்கள்வைத்ததே சட்டம், மேற்றிராணிமார் தங்கள் உத்தரவுப்படியேநடக்கவேண்டுமென வற்புறுத்துகின்றனர். விசேஷமாய்ப் பாடசாலைகளைக் கைவசப்படுத்தி இளைஞர்களைப் பொதுவுடைமைவாதத்தில் பயிற்றுகின்றனர்.

கடவுள் காலத்திற்கேற்றதலைவர்களைத் தமது திருச்சபைக்குக் கொடுத்திருக்கிறார். இந்தக் கத்தோலிக்கநாடுகளின் மேற்றிராணிமாரும், மூதன்மேற்றிராணிமாரும் வீரதளகர்த்தர்கள். உயிரைத் திரணமாய்மதித்துத் திருச்சபையின் உரிமைகளுக்காக-மக்களின்மூலாதார உரிமைகளுக்காகப் போர்புரிந்துவருகின்றனர். ருஷியாவின் அபாண்ட அநீதிமுறைகளை வீரமாய்எதிர்த்துவருகின்றனர். தங்களுடைய எதிர்ப்புக்குப்பிரதிபலன் என்னவென்று இவர்கள் நன்குணர்வார்கள். பசிப்பிணி, சிறைச்சாலை, சித்திரவதை. ஆயுள்தண்டனை, மரணம், முதல்நூற்றாண்டுகளின் வேதகலாபனையைவிடக் கொடியகலாபனை. ஆனால், கிறீஸ்துநாதர், நாஸ்திகபொதுவுடைமைவாதம்,— இரண்டில் எதைத் தெரிந்துகொள்வதென அவர்கள் தயங்கவில்லை.

மூந்த யூகோசிலோவியா அதிமேற்றிராணியார் ஸ்ரெப்பினாக் ஆண்டவரைக் கைதுசெய்து 15 வருடக் கடினசிறைத்தண்டனை விதித்தனர். பிந்த ஹங்கேரிய மூதன் மேற்றிராணியாரான கருதினால் மின்சென்றி ஆண்டவர் ஆயுள்பரியந்த சிறைத்தண்டனை பெற்றுச் சிறையின்கம்பிகளுக்குப் பின்னால்வாடுகிறார். தேசத்துரோகம், கள்ளமார்க்கெற், வேவுபார்த்தல் ஆதியனவே வழக்கமான குற்றச்சாட்டுகள்.

இதே நாடகம்மீண்டும் 80-சதவிகிதம் கத்தோலிக்கநாடாகிய, செக்கோசிலோவாகியாவில் நடிக்கப்படுகிறது,—இப்போது முன்னைவிடத்திறமையாக. ஹங்கரியைப்போல் இங்கேயும் அரசாங்கம் கல்வி முழுவதையும் தன் கைக்குள்கொண்டுவரப் பெரும் பிரயத்தனம்செய்கிறது. ஆரம்பகல்விமுதல் எல்லாம் அரசாங்கத்தின் உரிமை. "பாடசாலைகளிலும், வெளியிலும் இளைஞரை எங்கள் இலட்சியத்தின்படி, மார்க்ஸ்—லெனின் கொள்கைகளின்படி, பயில்விப்பது அரசாங்கத்தின் கடமை."

அரசாங்கத்துடன் சமரசத்துக்குவர மேற்றிராணிமாரின் தூதுக்கோஷ்டிஒன்று முயன்றது. பயனில்லை. பங்குனிமாதம் 22-ந் திகதி மேற்றிராணிமார் கூடிப்பேசும் தனியறையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த மைக் கருவிகளைக் கண்டுபிடித்ததும் சமரசப்பேச்சு முறிந்தது. குருமாரின்மனதைக்கலைக்க அரசாங்கம் தனது பாதுகாப்பில் ஓர் நவீன "கத்தோலிக்கசேவை" தொடக்கியிருக்கிறது. "கத்தோலிக்ககுருமாரின் செய்தி" என்றொரு பத்திரிகையும்வெளியிடுகிறது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

### பாதுகாவலன் பத்திராசிரியர் அவர்களுக்கு :—

ஐயா! கொழும்புத்துறைத் தாபனத்திலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அடைக்கலப்பிதாவாம் அர்ச். சூசைமாமுனிவர் மேல் 'பாதுகாவலன்' மாஜி பத்திராசிரியர் சேவாலியர் பிரான்சீஸ் தம்பு அவர்கள்பாடிய ஐந்து விருத்தப்பாக்களையும் நான் கேட்டறிந்தபடியே ஈண்டு தருகின்றேன். இவற்றில் யாதும் தவறுகள்இருப்பின் அவற்றைத் திருத்தி அனுப்புமாறு பழையமாணவ அன்பர்களை வினயமாகவேண்டுகின்றேன்.

ஓர்பழைய மாணவன்

1. மாதவ முனியே! மருமலர்க் கொடியே!
மருத்துமா மூலிகை அமுதே!
ஆதுலர்க் கரசே! அடைக்கல பதியே!
அடியனிவ் வாதரை தனிலே
ஆதர விழந்தேன், அருந்துயர் அடைந்தேன்
அப்பனே! ஆர்க்கெடுத் துரைப்பேன்
போதவிழ் கொழும்புத் துறையுறை பதியே
புரவலா சூசைமா முனியே!

2. அருந்தவம் புரிந்தாய் அமலனை யணைத்தாய்
அவர்க்கமு தூட்டிநீ வளர்த்தாய்
பெருந்துய ருழன்றாய் பிரபஞ்ச மிகழ்ந்தாய்
பெருகுபேர் வரமெலா மடைந்தாய்
திருந்தலர் கரத்தோய் சிறியனென் றெனைநீ
சினப்பினுஞ் சேவடி பிரியேன்
வரந்திகழ் கொழும்புத் துறையுறை பதியே
மாதவா சூசைமா முனியே!

3. உன்முகஞ் சற்றே சாய்த்திட வேண்டும்
உன்மகன் நோக்கிட வேண்டும்
என்றனை யவர்க்குக் காட்டிட வேண்டும்
என்துயர் சாற்றிட வேண்டும்
அன்பொடு என்னை அணைத்திட வேண்டும்
அப்பனே! காத்திட வேண்டும்
துன்பகல் கொழும்புத் துறையுறை பதியே
சுத்தனே சூசைமா முனியே!

4. என்பொரு ளெல்லாம் உன்பொருளாக
எடுத்தெனை ஆட்கொள வேண்டும்
துன்பமே யெல்லாம் துடைத்திட வேண்டும்
சுகமர ணந்தரல் வேண்டும்
உன்பெரும் வல்ல அடைக்கலம் வேண்டும்
உவந்தெனைப் புரந்திடல் வேண்டும்
துன்பறு கொழும்புத் துறையுறை பதியே
துய்யனே சூசைமா முனியே!

5. சஞ்சல மிகுந்த செகந்தனி லடியேன்
சஞ்சரித் திறுதியாங் காலம்
துஞ்சியே ஆவி பிரிந்திடு வேளை
துணையெனக் காகநீ வந்து
அஞ்சலே யருள்வாய் அடைக்கலம் புரிவாய்
அனந்தபே ரின்பமே தருவாய்
மஞ்சுயர் கொழும்புத் துறையுறை பதியே
மாதவா சூசைமா முனியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்திலே பத்திமா நாயகி

பத்திமாநாயகியின் திருச்சுரூபம் ஒன்றுமேற்குஐரோப்பியநாடுகளிலும், தென்னுபிரிக்க—கிழக்காபிரிக்கநாடுகளிலும் இரண்டுவருடகாலம் 121 மேற்றிராசனங்களுக்குத் தரிசனையளித்த தன்மேல் சமீபத்திலே முஸ்லீம்ஆட்சியிலுள்ள எகிப்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, அதனைக்கண்டுகொள்ளுமாறு பிரிவினைச்சபைக் கிறீஸ்தவர்களும், முஸ்லீம்களும் உட்பட அந்நாட்டின் அநேகபகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானமக்கள் வந்துகூடினார்கள். அதன் நான்குநாள் தரிசனையிலும் முதன்முதலாக ஹெலியோப்போலிஸ் நகரிலே லத்தீன்பாஷையில் திருச்சடங்கு நடைபெறும் பஸிலிக்காஎனும் மகாஆலயத்தில் அது ஸ்தாபிக்கப்படலாயிற்று. இங்கே நாறு சமயத்தலைவர்களும் சமூகமாகி அன்றிரவைச் செபத்திலே கழித்தார்கள்.

அதன்மேல் மற்ரூறியே எனுமிடத்தை நோக்கி எட்டுமைல் தூரமான சுற்றுப்பிரகாரம் நடைபெறலாயிற்று. திருக்குடும்பம் எகிப்திலே தனது அஞ்ஞாதவாசத்தின்போது இந்தவிடத்தில்தான் அடைக்கலம்புகுந்திருந்ததெனப் பாரம்பரியம் கூறுகின்றது. திருச்சுரூபம் அழகியபுஷ்பங்களால் சிங்காரிக்கப்பட்டிருந்த ஓர்காரின்மேல் எழுந்தருளச்செய்து முஸ்லீம்பொலிசர்காவலாகப் புடைசூழ்ந்துசெல்ல, ஆயிரக்கணக்கானோர் கீதங்கள்பாடியும், செபங்களோதியும் பின்செல்லப் பெரிய ஊர்வலமாகக் கொண்டுபோகப்பட்டது. அதனோடுசென்றவண. டெ மோட்ரியெஸ்சுவாமியார் "திருக்கன்னிகையின்மரம்" என்று அழைக்கப்படும் முதியமரத்தின் அடியில்நின்று பிரசங்கஞ்செய்தனர்.

இத்தோட்டத்திலே அத்தருணம் 5,000 பேர்வரையில் சமூகமாயிருந்தார்கள். அப்போது கெய்ரோநகரிலே பாப்பாசின் ஸ்தானிகாது காரியதரிசியான மொஞ். எச். ஈ. காடினேற்சுவாமிஅவர்கள் பலஸ்தீனுவின் அகதிகளுக்காகவும், பரிசுத்த ஸ்தலங்களின் பாதுகாப்புக்காகவும் மன்றுடிக்கொள்ளுமாறு சகலரையும் கேட்டுக்கொண்டார்.

மற்ரூறியே எனுமிடத்திலிருந்துசுற்றுப்பிரகாரம் கெய்ரோ நகரிலுள்ள அர்ச். சூசையப்பரின் ஆசனக்கோவிலை நோக்கிப் பத்துமைல்தூரம்தொடர்ந்து நடைபெற்று அதனைச்சேர்ந்ததும் காலை 6 மணி முதல் இரவு 10-30 மணிவரையில் 12,000 சனங்கள் குழுமியிருந்து திருச்சுரூபத்தை வணங்கினின்றூர்கள். பிந்தஅது மேரி றெப்பனூற்றிக்சின் ஏகாந்தசபைக் கன்னியர்மடத்துச் சின்னக்கோவிலுக்குக் கொண்டுபோகப்பட்டு ஆங்கே அவர்களெல்லாம் இராமுழுவதும் அதன் முன்பாகச் செபஞ்செய்தார்கள்.

பின்னர் அது திருக்குடும்பம் எகிப்துக்குத் தப்பிச்சென்றபோது நடந்துசென்றபாதையெனப் பாரம்பரியமாகக் கொள்ளப்படும் வழிநீளம் போட்செட்வனூந்தரத்தினூடாகக் கொண்டுசெல்லப்பட்டுப் போட்செட்நகரிலே லத்தீன்பாஷையில் திருச்சடங்குநடைபெறுவதும், உலகின் இராக்கினியான மரியநாயகியின்பேரால் பிரதிட்டைசெய்யப்பட்டுள்ளதுமான ஆசனக்கோவிலிலே ஒருநாளைக் கழித்தபின் திரும்பக் கெய்ரோநகர் கொண்டுசெல்லப்பெற்று அந்நகரிலுள்ள மிகப்பெரிய விசாரணைப்பங்குகளில் ஒன்ருகிய அர்ச். மாற்குவின் ஆலயத்தில் எகிப்தின் இராணியாக முடிசூட்டி வைக்கப்படலாயிற்று.

## பாப்பாசரும் கம்யூனிசமும்

ஜேர்மனியிலே போக்கம்நகரில் இம்மாதம் 4-ந்திகதி நடைபெற்றகத்தோலிக்கமகாநாட்டில் சமூகமாயிருந்தவர்களுக்குப் பரிசுத்தபாப்பாசர் றேடியோமூலம் பிரசங்கம் பண்ணுகையில், கம்யூனிசத்தைக் கடைப்பிடிக்கும் கத்தோலிக்கர் திருச்சபையைவிட்டு நீக்கப்படுவர்என்று தாம்விடுத்த பிரகடனத்தின் நோக்கத்தைப் பின்வருமாறு விளக்கினூர்:

"கத்தோலிக்க சமயத்திற்கும், நாஸ்திக கம்யூனிசத்திற்குமிடையே எல்லைக்கோடு வரிப்பதே அப்பிரகடனத்தின் நோக்கம். தொழிலாளரைமட்டுமல்ல, எல்லாக் கத்தோலிக்கரையுமே மாக்ஸிஸத்திலிருந்து காப்பாற்றவேண்டும்; ஏனெனில் மாக்ஸிஸம் கடவுளை மறுக்கிறது, கடவுளை ஆராதிப்பதை மறுக்கிறது. அந்தப்பிரகடனம் ஏழைகள் தனவந்தர், முதலாளிகள் பாட்டாளிகள் என்றபாகுபாடு எதுவுமின்றி எல்லோருக்கும் பொருந்தும். திருச்சபையின் சமூகவேலைத்திட்டம் உண்மை, நீதி, கிறீஸ்துவ பிறர்சிநேகம் ஆகிய மூன்று தூண்கள்மீது கட்டப்பட்டுள்ளது."

## மகாநாட்டுக் காணிக்கை

சென்றஆடி மாதத்தில் நான்சிநகரில் நடைபெற்ற பிராஞ்சிய தேசீய நற்கருணை மகாநாட்டில் நிறைவேறிய திருப்பலி பூசையின்போது பிராஞ்சுதேசத்து எல்லாமேற்றிராசனங்களும், குடியேற்றநாடுகளும் தங்கள் காணிக்கைகளைச் சமர்ப்பித்தன. பூசையிலே காணிக்கைச்செபம் சொல்லுமுன், சுதேசஉடைகளுடன் 53 பிரதிநிதிகள் பீடத்தின்முன்சென்று சீனதேசமிஷனரிகளுக்காக நற்கருணை விளக்குக்குஎண்ணெய், பூசைரசம், மருத்துவசாலைகளிலிருக்கும பிணியாளருக்குப் பிராஞ்சிய ஆபிரிக்க பழங்கள், பிராஞ்சிய மோட்டர் தொழிற்சாலையில் செய்யப்பட்ட கார்ஒன்று, நிலக்கரிச்சுரங்கங்களில் வேலைசெய்பவர் பலமூடைகரி, பிரித்தனிய பிரதேசத்துக் கடற்தொழிலாளர் பிடித்த மீன்கள் முதலியவற்றைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்கள். இது பழைய காலத்துக் கிறீஸ்தவர்கள் தங்கள்விளைபொருட்களைக் காணிக்கை செலுத்தினதை ஞாபகமூட்டுவதாயிருந்தது.

## நோவாவின் பேழை

சிலகாலத்திற்குமுன் அராராத் மலைக்குமேல் பறந்துசென்ற சில ஆகாயவிமானிகள் அம்மலைமீது தாங்கள் கண்ட சிலவஸ்துக்கள் சிதைந்துபோன ஒரு கப்பலைப்போலத் தோன்றியதாகத் தெரிவித்தார்கள். சலப்பிரளயத்தின்போது நோவாவும், அவருடைய குடும்பத்தினரும் வசித்துவந்த கப்பல், சலம் வடிந்தபோது அராராத் மலைமீது தங்கிவிட்டது என்று வேதநூலில் கூறப்பட்டுள்ளதால், அந்த ஆகாயவிமானிகளின் கண்ணுக்குப் புலப்பட்ட மேற்கூறிய பண்டம் நோவாவின் பேழையாயிருத்தல்கூடும் என்று கருதவேண்டியிருக்கிறது. புராதனப்பொருள் ஆராய்ச்சி நிபுணரான டக்றர் ஆரோன் சிமித் என்ற அமெரிக்கர் அராராத் மலைக்குச்சென்று ஆராய்ச்சிசெய்யத் துருக்கியஅரசினரிடமிருந்து அனுமதி பெற்றுள்ளார். எகெர்ட்டான் சைக்ஸ்என்ற ஆங்கிலேயர் ஒருவரும் அராராத் மலைக்குச்செல்ல அனுமதி கோரியுள்ளார்.

## ஒரு கிராமத்தில் 18 குருமார்

வடபிராஞ்சிலே பாஸ்தேகவேஎனும் பகுதியிலுள்ள அலுவாக்னே எனும் கிராமம்2,700சனங்களைக்கொண்டுள்ளதாயினும் பதினெட்டுக்குருமாரை—விசேஷமாய்க்கடந்த 25 வருடங்களிலும் 14 குருமாரைத் திருச்சபைக்கு அருளியிருக்கின்றது. இவர்களில் அதிவிருத்தாப்பியர் 90 வயசுடையவர். இவர் 66 வருடங்களின்முன் அபிஷேகஞ் செய்யப்பெற்றூர். மற்றொருவர் 85 வயசுடையவர். வயதில் அதிகம் இளையவரான வண. ஹென்றி பெய்லியல் சுவாமியார் சமீபத்திலேயே அபிஷேகஞ்செய்யப்பெற்றூர் 1951-ம் ஆண்டிலே அக்கிராமம் மேலும் இரு குருமாரைக் [illegible] நம்பப்படுகிறது. மூன்று குடும்பங்கள் தனித்தனி இரு குருமாரைஉதவியிருக்கின்றன.

## ஹிற்லரின் சினிமாச்சாலை

பேர்ச்டெஸ்காடென் நகருக்குச் சமீபமாய் ஹிற்லரின் மலைவாசஸ்தலமாகிய ஏபேர்சல்ஸ்பேர்க் எனுமிடத்திலே அவருக்கென்று விசேஷவிதமாகக் கட்டிய சினிமாத்தியேற்றர் இடிக்கப்பட்டு, அதிலடங்கிய கட்டுவேலைப் பொருட்கள் மியூனிச் நகரிலே ஏழாயிரம்பேருக்கு இடவசதியளிக்கக்கூடிய கத்தோலிக்க கோவில் ஒன்றைக் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. விமானத்தாக்குதல் ஒன்றூல் அழிக்கப்பட்ட திருஇருதய ஆண்டவர் கோவிலினிடமாகவே இது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. ஹிற்லரின்சினிமாத்தியேற்றர் 200 அடிக்குமேல் நீளமும், 100 அடி அகலமுங்கொண்ட ஓர் மண்டபமாகும். இதற்கென்று சிறந்தகட்டுவேலைப்பொருள்கள் உபயோகிக்கப்பட்டன.

## ஹிற்லரின் திட்டமும் கழிந்தது.

1946-ம் ஆண்டு கழுவேற்றப்பட்ட நாஸிய தலைவர்களில் ஒருவரான அல்பிறெட் றூசென்பேர்க் என்பவரின் தினவர்த்தமான குறிப்புப்புத்தகத்தில் கண்டுள்ளபடி ஹிற்லர் கத்தோலிக்க திருச்சபையின் செல்வாக்கை நசித்துவிடுமாறு "அதிகமான பாப்புமார் அதிக உசிதம்" எனக்கூறி, ஜேர்மனிக்கும், ஏனையஐரோப்பிய நாடுகளுக்கும "பாப்புமார்"களை நியமிக்கத்திட்டம் போட்டிருந்தார். இந்தக்குறிப்புப் புத்தகத்தில் அடங்கியவைகளும், நூறெம்பேர்க் நகரிலே நாஸியதலைவர்களது விசாரணையின்போது, வழக்காளிகள் பக்க நியாயவாதிகளில்ஒருவரான திரு. றூபேட் கெம்ப்னர் அவர்களால் செய்யப்பட்ட வியாக்கியானம் ஒன்றும் அமெரிக்கஐக்கியதேச இராணுவ அரசாங்கத்தால் வெளியிடப்படும் 'டேர் மொனூற்' எனும் ஜேர்மன் சஞ்சிகையில் பிரசுரமாயிருக்கின்றன.

## மற்றேர் லூர்துபதியாத்திரை

அரசியற் கைதிகளும், தேசப்பிரஷ்டஞ் செய்யப்பெற்றவர்களுமாய் உலகிலுள்ள மூன்றுகோடிமக்களினதும் விடுதலைக்காக மன்றூடும் நோக்கமாய்ப் பிரித்தானி உட்படச் சுமார்பத்துநாடுகளிலிருந்து வருகிறஐப்பசிமாதம் 8-ந்திகதிமுதல் 11-ந்திகதிவரையில் லூர்துதிருப்பதிக்கு ஓர் யாத்திரைநடைபெறவிருக்கின்றது. இந்தயாத்திரை எண்ணத்தை உண்டுபண்ணியது, டச்சுக் கத்தோலிக்க ஸ்தாபனம் ஒன்றே. கிறீஸ்தநாகரீகத்தைப் பாதுகாப்பதற்கென இருந்துவருகின்ற சர்வதேச கொம்மிற்றியின் ஆதரவிலேயே இந்த யாத்திரை நடந்தேறும். இதிலே அமெரிக்க ஐக்கியதேச, கனடிய யாத்திரிகர் கூட்டங்களும் கலந்துகொள்ளும்.

## பத்தியாநாயகியின் சினிமா

தமது திருக்குமாரனுக்கு மாறுகச் செய்யப்பட்டுவரும் பாவங்களுக்கு உலகமுழுவதும் பரிகாரஞ் செய்யவேண்டும்; உலகமுழுவதும் செபமாலை செபிக்கவேண்டுமெனத் தாம் விரும்புவதாக மூன்று பிள்ளைகளுக்குச் சொல்லும்படியாகவே பரிசுத்ததேவதாயார் பத்திமாபதிக்கு எழுந்தருளிவரலாயினர். அப்போதுதான் ருஷியா மனந்திருப்பப்படும்; உலகத்துக்குத் திரும்பவும் சமாதானம் வருமென்றும் அப்பிள்ளைகளுக்குத் தெரிவிக்கலாயினர். தேவதாயார் ஆசித்தபடியே இந்தச்செய்தியை அகிலமுழுவதும் நன்குபரப்புமநோக்கமாக, லண்டன் நகரிலுள்ள கத்தோலிக்கபிலிம் ஸ்தாபனம் பத்திமாசினிமாப்படம் ஒன்றைத் தயாரிக்க ஆயத்தப்படுகின்றது. இந்தப்புரட்டாசிமாதம் 29-ந்திகதி அர்ச். மிக்கேலினதும், பரிசுத்த சம்மனசுகளினதும் திருநாளன்று லண்டனிலிருந்து பிலிம்கோஷ்டி ஒன்று பத்தி[illegible]விருக்கின்றது. சினிமாப்படம்பிடிப்பதில் அதிகம் திறமைவாய்ந்த ஓர்குழுவினர் தங்கள்கமறுக்கள், பளீரிட்டொளிவீசும் லைற்றுகளுடனும் அங்குசென்று தேவதாயார் காட்சியளித்த மலையினதும், தற்போது அப்பூசிதத்தலத்தில் பெருந்திரளாக ஒன்றுகூடுகின்ற யாத்திரிகளினதும் உண்மையான பிரதிமைகளைப் படம்பிடிப்பார்கள். செபமாலைமாதமாகிய வருகிற ஐப்பசிமாதத்து முதலாவது சனிக்கிழமையன்றுதான் அப்பதியிலே படங்கள்பிடிக்க ஆரம்பிக்கப்படும்.

## அமெரிக்கமாதரின் உதவி

கிழக்கு ஐரோப்பியநாடுகளிலிருந்து கடத்தப்பட்டும், அந்நாடுகளிலிருந்து வலசைவாங்கியுமுள்ள 30 லட்சம் கத்தோலிக்க அகதிகள்மத்தியிலே திருத்தொண்டாற்றிவருகின்ற ஆயிரங்குருமாருக்குக் கஷ்டநிவாரணம்அனுப்பிவைப்பதற்கான திட்டங்களைச் சமீபத்திலே அத்திலாந்திக் நகரில் கூடிய அமெரிக்க கத்தோலிக்க குமாரத்திகள் சங்கம் செய்திருக்கின்றது. இந்தக் குருமார் வடஜேர்மனியைச்சேர்ந்த ஓர்பகுதியிலே அமர்த்தப்பட்டிருக்கிறூர்கள். அமெரிக்க கத்தோலிக்க குமாரத்திகள்சங்கம் மாதந்தோறும் தற்போது 600 பவுணுக்குமேல் பெறுமதியான கஷ்டநிவாரண பொருட்களை ஐரோப்பாவுக்கு அனுப்பிக்கொண்டு வருகிறது.

---

## இஸ்பிரித். திரு. பின்வரும் 15-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 7: 11—15)

அக்காலத்தில் யேசுநாதர் நயீம் என்னும் நகரத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவருடைய சீஷர்களும் திரளானசனமும் அவரோடு போனூர்கள். அப்படியிருக்க அவா நகரத்தின்வாசலைச் சமீபித்தபோது இதோ! தன் தாய்க்கு ஏகசுமாரனுகிய மரித்த ஒருவனை வெளியிற்சுமந்து கொண்டு வந்தார்கள். அவளோவிதவையாயிருந்தாள். நகரத்தாரில் வெகுசனமும் அவளோடிருந்தது. ஆண்டவர் அவளைப்பார்த்த மாத்திரத்தில் அவள்பேரிற் சித்தமிரங்கி அவளைநோக்கி: அழாதே என்றூர். பின்னும் பாடையின்கிட்டப்போய் அதைத் தொட்டார். அதைச் சுமந்துகொண்டிருந்தவர்கள் நின்றுவிட்டார்கள். அவர் வாலிபனே! உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திருஎன்றூர். உடனே செத்தவன் எழுந்து உட்கார்ந்துபேசத்தொடங்கினுன். பின்னும் அவர் அவனைத் தாயிடமளித்தார். ஆகவே எல்லோரும் பயம் அடைந்தார்கள். அல்லாமலும் சர்வேசுரனைத் துதித்து: பெரிய தீர்க்கதரிசி 'நமது நடுவே எழுந்தருளியிருக்கிறூர் என்றும், சர்வேசுரன் தமது சனத்தைச் சந்தித்தருளினூர் என்றுங்கூறினூர்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அற்புதவரம்பெற்ற கன்னிகையும் வேதசாட்சியுமான அர்ச். பிலோமினுவின் பத்திவேகம் நிறைந்த மன்றுட்டினூல் யான் கேட்டவரம பெற்றேன். தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. அர்ச். பிலோமினுவின் நாமம் எங்கும் புகழும்படிக்காக இதைப் பிரசுரிக்கிறேன்.

D. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிகளில் சிறந்தது தமிழ் மொழியே!

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார்

இந்நூற்றுண்டின் முன் இருபதாண்டுகளில்வாழ்ந்த கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ்நாடு இப்பொழுது நன்கு அறியும். அவர் தமிழ்மொழியினிடத்து எத்துணைபற்று வைத்திருந்தார்என்பதைச் சுருக்கமாகக்காட்டுவதே இக்கட்டுரையின்நோக்கம். தாய்மொழியாகிய தமிழ்மொழியே உலகிலுள்ள பல்வகைமொழிகளிற் சிறந்தது என்று அவர்கருதினர். அவர் ஆங்கிலம், சமஸ்கிருதம், வங்காளம், ஹிந்தி முதலான மொழிகள்அறிந்தவர். பலமொழிகளிலுஞ் சிறந்தஇன்பம் தமிழ்மொழியிலிருந்தே அவர்பெற்றூர்என்று உலகறியக்கூறியுள்ளார்.

"யாம்அறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவதுஎங்கும் காணேம்."

என்று அவர்பாடினது பலருக்குத்தெரியும். மக்கள்பொதுவாகத் தாங்கள் கண்டுஅறியாத அமிர்தத்தை மிக்க இனிமை வாய்ந்ததுஎனக் கருதுவது வழக்கம். தங்களிடம் இனிமையானதொரு பண்டம்இருந்தாலும், இருக்கின்ற காரணத்தாலேயே அதன்அருமையை அறியாதுபோவதுண்டு. அதை உன்னியபாரதியார் தமிழ்மொழி அமிழ்தினும் இனியது, தமிழ்நாடு அமிழ்தத்தைவிட இனியதுஎன்று சொன்னர்.

"அமிழ்தில் இனியதடிபாப்பா—
நம்ஆன்றேர்கள் தேசமடி
பாப்பா',

என்ருர். தமிழாகியஅமிழ்தத்தை உண்டவர்கள் இப்பூவுலகில் வாழ்ந்தாலும் பொன்னுலகில் வாழ்வாரோடு ஒப்பர் என்பதும் அவராற்சொல்லப்பட்டது.

"தெள்ளூற்ற தமிழமுதின்
சுவைகண்டார்
இங்குஅமரர்சிறப்புக்கண்டார்"

என்றதை நோக்குங்கள்.

செந்தமிழ், செந்தமிழ்நாடு என்னும் வேளைகளில் அவர்செவியுற்ற இன்பம் இணைத்துஎன்று அளவிட்டுச்சொல்ல முடியாது. இருந்தாலும் அவர்செவியிலே இன்பத்தேன் தாரைதாரையாக வந்து பொழிவதுபோல் தோற்றிற்று என்று கூறநினைத்தார் இதனையே,

"செந்தமிழ் நாடேனும் போதினி
லே—இன்பத்
தேன்வந்து பாயுதுகாதினிலே',

எனக் கனிவுடன்பகர்ந்தார். இந்தத் தேன்போன்ற இனிமையான ஓசை தமதுகாதில் மாத்திரம்பட்டால் போதாது, உலகினில்யாவரும் அவ்வோசையால் உவகைகொள்ள வேண்டும்என்று கருதி,

"தேமதுரத் தமிழோசை உலக
மெல்லாம்
பரவும்வகைசெய்தல்வேண்டும்"

என்று சொன்னர்.

தமிழிலேஉள்ள நூல்களிற் சிறந்தனவாக அவருக்குத்தோற்றியவை கம்பர் இராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம்ஆகியவை. ஆதலால் அவற்றைத் தமிழ்நாட்டிற்குச் சிறப்பாகவும், உலகிற்கே பொதுவாகவும் கொடுத்துப் போன பெருவள்ளல்களான் கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகியோரை அவர் அடிக்கடி வழுத்துவது உண்டு. அதனுல்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்
போல்
வள்ளுவர்போல் இளங்கோ
வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த
தில்லை.
உண்மை வெறும்புகழ்ச்சி
யில்லை"

என்று விளம்பினர். உலகினர் நலத்திற்காகவும், நம்முடையபாதுகாவலுக்காகவும் அந்நூல்களின்சிறப்பை எடுத்துச்சொல்லுமாற்றுல் தொண்டுசெய்ய வேண்டும் என விரும்பினர். தெருவெல்லாம் தேமதுரத் தமிழோசை நிரம்பியிருக்க வேண்டும்என்பது அவர் விளைவு. அதனுல்,

"சேமமுற வேண்டுமெனில் தெரு
வெல்லாந்
தமிழ்முழக்கஞ் செழிக்கச்செய்
வீர்!',

எனத் தமிழ்நண்பர்க்கு உரைத்தார். மேலும்,

"கல்விசிறந்த தமிழ்நாடு —புகழ்
கம்பன்பிறந்த தமிழ்நாடு"
"வள்ளுவன்தன்னை உலகினுக்கே
தந்து
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு.
—நெஞ்சை
அள்ளுஞ்சிலப்பதி காரமென்றோர்
மணி
ஆரம்படைத்த தமிழ்நாடு

எனக்கூறிக் கர்வங்கொண்டார். "வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழியே!" என வேறு உரைத்தார். "எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே!" என உரிமைபாராட்டிப்பேசினர். சொற்கள் எல்லாவற்றுள்ளுஞ் சிறந்த சொற்களைக் கொண்டுள்ளது தமிழ் மொழிஎனக் கருதியஅவர்,

"சொல்லில்உயர்வு தமிழ்ச்
சொல்லே —அதைத்
தொழுது படித்திடடிபாப்பா!

எனக்கூறியது வியப்பன்று.

பழம்பெருமைமாத்திரம் பேசிஇருந்தாற் போதாதுஎன்று பாரதியார் எண்ணினர். புதிதாகத் தக்கஅணிகலன்கள் தமிழன்னைஅணியப் பெறுதல் வேண்டும்என்று விரும்பினர். சிலப்பதிகாரம்என்னும் பழையமணியாரம் ஒன்று போதாதுஎன நினைத்தார். அதனுடுஒத்த புகழ்நிலை நிறுத்தக்கூடிய நல்லகாவியங்களும் புதுநூல்களும் இயற்றப்படவேண்டும் என்று விளம்பினர். அதனையே,

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல்
வேண்டும்

என்னும் அடிசொல்வது. அதற்கு மேலும், பிறதேயங்களிற் காணப்படும் கலைச்செல்வங்கள்யாவும் இங்கு கொணர்ந்து சேர்க்கப்படவேண்டும்என்ற பெருத்தஆசையுடையவராகப் பாரதியார் இருந்தார்.

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—
கலைச்செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

என ஆணையிட்டார்.

பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல்
வேண்டும்

என்று குறிப்பிட்டார். அவர் இவ்வுலகை விட்டுச்சென்று கால் நூற்றுண்டுக்கு மேலாகிவிட்டது. இறவாதபுகழுடைய புதுநூல்கள் பல இன்னும் இயற்றப்படவில்லை. கலைச்செல்வங்கள் எல்லாம் கொணர்ந்து இங்கு இன்னும் சேர்க்கப்படவில்லை. பிறநாட்டுநல்லறிஞர் சாத்திரங்களிற்சிலவே தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ்ப்பெரியார்கள் ஆவனசெய்ய முன்வருவாராக.

## ஸ்ரீ வேதநாயகம்பிள்ளை அவர்கள்

— அமுது —

சொற்பஞ்சம் அறியாத புலவர்சிங்கம்;
சுவைபொங்கக் கவியமுது சுமந்தவங்கம்;
கற்பனையில் ஈடில்லாக் கலைஞர்சங்கம்;
கதைநூலை முதன்முதலில் கடைந்ததங்கம்;
பற்பலநற் கீர்த்தனங்கள் பொருளும்சொல்லும்
பால்தேனின் இன்சுவையும் கலந்துசெய்தான்
பொற்பதங்கள் இசைத்தட்டில் கேட்கும்போது
பொன்வேத நாயகத்தைப் புகழார்யாரே!

கீர்த்தனத்தில் ஒருசமயப் பதங்கள்பாடிக்
கிளிமொழியாய் வரும்வழியைத் தடுத்துவைக்க,
பார்த்தவர்கள் உச்சியிலே தூக்கிவைக்கப்
பாரினிலே சமரசநூல் பகர்ந்தான்கண்டீர்
சேர்த்திருக்கும் பொருளியைபு, எதுகைமோனை,
சிதையாது வார்த்திருக்கும் உருவம்,சொற்கள்
கோத்திருக்கும் தன்மை,இவை கண்டபோது
குருதெய்வ நூலென்று கும்பிட்டாரே!

## சின்னமடுப்பாடசாலை 50-ம் ஆண்டு நிறைவுவிழா

சின்னமடுப்பதிக் கத்தோலிக்கபாடசாலையின் 50-ம்ஆண்டு நிறைவுவிழாவை அதன் ஆசிரியர்களும், மாணவர்களும் பின்வரும் நிகழ்ச்சிகளுடன் ஆடம்பரமாகக் கொண்டாடினுர்கள்.

**சங்கீதவிழா :**

அன்று பரிசுத்தஅன்னையின் கோவில் ஆசிரியர்களாலும், மாணவர்களாலும், பெற்றேராலும் தேங்கியிருந்தது. அந்நேரம் வண. கட்டளைக்குரவர் மாணவர்களின் இனியகீதங்களுடன் திவ்வியபூசைநிறைவேற்றிப் பாடசாலையையும், மாணவர்களையும்பரிசுத்த அன்னையின் அடைக்கலத்தில் ஒப்படைத்து ஆசிசுந்தருளினர்.

மாலை 6 மணியளவில் இப்பகுதி வண. குருப்பிரசாதிகளைகளையும், பகுதிவித்தியாதரிசியவர்களையும் வரவேற்று உயர்ஆசனங்களில் அமரச்செய்யவே, அவர்களுக்கு மாணவர் இருவர் மலர்மாலைகள் சூட்டிநிற்க, தலைமையாசிரியர் பாடசாலையின் வருடாந்தஅறிக்கையை வாசித்தார். அதனைத்தொடர்ந்து வண. நீக்கிலாஸ்சுவாமியவர்களாலும், வண. தலகாரியஸ்த சுவாமியவர்களாலும், கனம். வித்தியாதரிசியவர்களாலும் முறையே : "ஆசிரியர்களின் ஒத்துழைப்பு", "பாடசாலையின் வளர்ச்சி", "பெற்றூர்கடமை" என்னும் விஷயஙகள்பற்றி இனிதே பேசப்படலாயிற்று. பின்னர்திரளாகக் கூடியிருந்த பெற்றேரையும், பிரமுகர்களையும் மகிழ்வித்தற்பொருட்டுப் பலவித நடினங்களும், சுகாதாரநாடகமொன்றும், "அண்ணியார்கூறிய அறிவுரை" யென்னும்சரிதையும் திறமையுடன் நடித்துக்காண்பிக்கப்பட்டன.

**கைப்பணிக்கடை :**

சின்னமடுப்பதியின் வருடாந்த உற்சவத்தின்போது பாடசாலைப்பிள்ளைகள்செய்த கைப்பணிப் பொருட்களைக்கொண்டு ஓர் அழகியகடை திறந்துவைக்கப்பட்டது. ஆவணிமாதம் 1-ந்திகதி ஆசிரியர்களும், மாணவர்களும் குருமனைசென்று வண. கட்டளைக்குரவரை வாத்தியவரிசைகளுடன் அழைத்துவரவே, அவர் அங்கு சமுகமாயிருந்த பெற்றேருக்குப் பலபுத்திமதிகள் புகட்டிக் கைப்பணிக்கடையைத் திறந்துவைத்தனர். அவ்வேளை திரு. யோண்பிள்ளை ஆசிரியர் மாணவர்களின் கைப்பணித்திறனைவியந்து ஓர்பணமுடிப்பு வழங்கினர். நகரகாவலர் தலைவரும், மற்றும் பிரமுகர்களும், பெற்றேரும் பலபொருட்களையும் ஆனந்தத்துடன் வாங்கிச்சென்றனர். இப்பதித்திருவிழா முடிகிறவரையிலே இக்கடை சிறந்தகாட்சியளித்து நின்றது.

**சுற்றுப்பிரயாணம் :**

இம்மதி 3-ந்திகதி வண. கட்டளைக்குரவரும், உதவிக்கட்டளைக்குரவரும், ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிய மோட்டர் வாகனம்ஒன்றில் உல்லாச சுற்றுப்பிரயாணமொன்று நடத்தினர். கைப்பணிக்கடையால் பெற்றஆதாயத்தைக் கொண்டே ஆசிரியர்கள் இப்பிரயாணத்தை நடாத்தி மாணவர்களின் அறிவைப்பெருக்கினர். அன்று காலை 7 மணியளவில் பாடசாலையிலிருந்து சுற்றுப்பிரயாணம் செபமாலையோடும், இனியபாடல்களோடும், ஆரம்பமாகி மாதகல், பண்டத்தரிப்புப் பத்திமாபதி, கீரிமலை, காங்கேசன்துறைச் சீமெந்துத்தொழிற்சாலை, புகையிரதஸ்தானம், துறைமுகம் முதலியவிடங்களைப் பார்வையிட்டுத் தோலகட்டிச் சந்நியாசமடத்தையடைந்து அங்கு மத்தியானப்போசனமருந்தினேம். அப்பொழுது வண. மடாதிபதி அவர்களும், சில சந்நியாசிகளும் எங்களை நல்வரவேற்று உபசரித்தவகையை என்றும்மறக்கமுடியாது. சிறிதுநேரம் அங்கே இளைப்பாறியபின் பலாலிசென்று ஆகாயவிமானத்தில் ஏறி பார்வையிட்டோம். ஈற்றில் நிலாவரை, யாழ்ப்பாணக்கோட்டை, நூதனசாலை போன்ற பலகாட்சிகளையும் கண்ணுற்றபின் மாலை 10 மணியளவில் மீண்டும்பாடசாலைவந்து சேரலானேம்.

கண்டுகளித்தோன்

## மேற்றிராணியாருக்கு வரவேற்பு

சென்ற ஆவணிமாதம் 29-ந்திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்குத் திரிகோணமலை அர்ச். செபஸ்தியார் வாலிபசங்கத்தின் சார்பாக அர்ச். சூசையப்பர் கலாசாலை மண்டபத்தில் திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி ஆண்டவருக்கு ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவ்வமையம் சங்கத்தின் உப அதிபர் திரு. இ. பற்றிக் ஆசிரியர் தலைமை வகித்தார். திரு. செ. சிங்கராசா அவர்களால் ஆண்டவர் அவர்கட்குச் சிறந்த மலர்மாலை சூட்டப்பட்டது. பின்னர் சங்கஉபஅதிபர், உபதலைவர் திரு. இ. மார்செலின், தனாதிகாரி திரு. S. அந்தோனிப்பிள்ளை என்பவர்கள் தமிழிலும், திரு. J. M. ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் ஆங்கிலத்திலும் சொற்பொழிவாற்றினர். ஆண்டவர்அவர்களின் பதிலோடும், ஆசீர்வாதத்தோடும் கூட்டம் இனிது கலைந்தது.

—காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தாத்திரைமாதா திருநாள்
### சாட்டி — வேலணை

இத்திருநாள் வழமைபோல 12-9-49 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24-9-49 சனிக்கிழமை பாடற்பூசையுடனும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவு பெறும். இவ்வருடம் கடைசி இரவு வேஸ்பரும், திருநாள் பாடற்பூசையும் கோயில்முகப்பில் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் மண்டபத்தில் நடாத்தப்படும்.

கட்டளைக்குரு.

## திருநாள் அட்டவணை

1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம்

| | | |
|---|---|---|
| வெ | 16 | அர்ச். சிப்பிரியானும், ம.— அர்ச். கொர்நேலியாரும், பா. வே. |
| சனி | 17 | அர்ச். பிரான்சீஸ்கு ஐந்து திருக்காயங்கள் பதிந்த திருநாள் |
| ஞா | 18 | இஸ்பி. ஆகமனத். பின்வரும் 15-ம்ஞாயிறு—அர்ச். குப்பெர்த்தீனு சூசையப்பர், த. |
| திங் | 19 | அர்ச். சனுவாரியார், மே. வே. |
| செ | 20 | அர்ச். எயுஸ்தாக்கியார், வே. |
| புத | 21 | அர்ச். மத்தேயு, அ. சு. |
| வி | 22 | அர்ச். வில்லநோவா தோமையார் |

## சத்தியவேத பாதுகாவலன்

1949-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 15-ந் திகதி

## இந்தியா 'ஹிந்து நாடு'

இந்தியா இன்று எத்தகைய சுதந்தரம் பெற்றநாடு? அஃது மதச்சார்பற்ற ஓர்சனநாயகநாடு. அவ்வாருயின் அது எதனைத் தொடர்ந்து அனுஷ்டித்துவர வேண்டும்? அங்கே ஒவ்வொரு பிரசைக்கும் எப்படியானசுதந்தரம் இருக்கவேண்டும்? என்பனபற்றி இன்றையஉலகில் சனநாயகஆட்சிக்கு ஓர்அரண்போல் இருந்துவருகிறவரான பண்டிதஜவஹர்லால்நேரு கூறியிருப்பவைகள் பலருக்கும் நல்லுணர்ச்சி பிறப்பிப்பதாகும்.

இம்மாதம் 3-ந் திகதி யன்றிரவுஅலஹபாத்சர்வகலாசாலை மாணவர் கூட்டத்திலே பண்டிதஜவஹர்லால் நேரு அவர்கள் பேசுகையில் பின்வருமாறு கூறினர்: "உலகில் இன்று எதையுங்கண்டு நான் பயப்படவில்லை. ஆனல், இந்தியமக்கள் மனதில் ஏற்பட்டுள்ள குறுகிய மனப்பான்மை படுமோசமான விஷயமாகும். வேற்றுமைகளிடையே ஒற்றுமைகண்ட அற்புதநாடாகும்நம்இந்தியா. இந்த ஒற்றுமையைப் பாதுகாத்து நாம் பலப்படுத்தவேண்டும். இல்லாவிடில் நாம் அழிவுறுவோம்.

இந்தியாவில் மிகப்பெரும்பாலானேர் ஹிந்துக்களே என்பதில் சந்தேகமில்லை. ஆனல் முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், பார்ஸிகள், சமணர்கள் போன்ற சிறுபான்மையினரும் உள்ளனர் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இந்தியா "ஹிந்து நாடு" எனக் கருதப்படுமானல் சிறுபான்மையினர் இந்தநாட்டில் பரிபூரண பிரசா தத்துவம் உடையவர்களல்ல என்றே ஆகும். 'ஹிந்து கலாசாரம்' 'ஹிந்து நாடு' என்ற பேச்சுகளெல்லாம் வெறும் அபத்தமாகும். நாம் ஒரு சுதந்தரநாடாக நிலைத்திருக்க வேண்டுமானல் குறுகியமனப்பான்மை, தனித்துநிற்கும் போக்கு ஆதியவற்றை ஒழிக்கவேண்டும்.

இந்தியா மதச்சார்பற்ற சனநாயகநாடு (secular democratic State) என நாம் பிரகடனம் செய்துள்ளோம். எனவே, அரசியலின் மதச்சார்பற்ற தன்மையைத் தொடர்ந்து அனுஷ்டித்து வரவேண்டும். ஏனைய சுதந்தரநாடுகளில் இருப்பதுபோல இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பிரசைக்கும் பரிபூரண சுதந்தரம் இருக்கவேண்டும்."

அடுத்தநாள் அதே நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றிலேபேசுகையில் பண்டித நேருஅவர்கள் மதச்சார்பற்ற அரசாங்கத்தின் உண்மை அர்த்தத்தைப் பின்வருமாறு விளக்கினர்: "மதச்சார்பற்ற சனநாயகநாட்டில் எந்தக்குலத்தைச் சேர்ந்தவராயினுஞ்சரி, எந்தமதத்தை அனுசரிப்பவராயினுஞ்சரி எல்லோருக்கும் எல்லாத்துறைகளிலும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படும்.

கலாசாரம், கலாசாரம் எனப் பிரமாதமாகப் பேச்சு அடிபடுகிறது. ஆனல், இங்குமங்கும் குறுகிய மனப்பான்மையுடையவர்கள் பலரையும் காண்கிறோம். நமது புராதன கலாசாரத்தைப் பாதுகாக்கவேண்டியது தான். ஆனல், குருட்டுப்பிடிவாதமாக அதைப் பின்பற்றக்கூடாது. சகலதிசைகளிலும் அதிவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் மற்றநாடுகளுடன் கூடவே நாமும் செல்லவேண்டும். பின்தங்கி விடக்கூடாது. புராதன கலாசாரத்தைப்பற்றியே ஓயாதுபேசி மக்களைத் தவருன பாதையில் திருப்பிவிட்டால் முன்னேற்றம் தடைப்படும்."

## பரிசுத்த செபமாலைப் படையணி

"பத்திமா இராக்கினி உபதேசித்த பத்திமுயற்சிகளைப் பரப்புவதில் உழைக்கும்குருமாருக்கும், சந்நியாசர்களுக்கும் பரிசுத்தபிதா தமது விசேஷ அப்போஸ்தொலிக்க ஆசீர்வாதம் அருளுகிறார்."

செபமாலைமாதாவின் பிள்ளைகளே! இக்காலத்தின் அக்கிரமங்களுக்கு ஏற்ற அவுடதமென மாதாவெளிப்படுத்தின பத்திமுயற்சிகளைக் கையாளுங்கள். குடும்பகோளாறுகளால் அல்லற்படும் அன்னையரே! மனைவியரே! மாதாவின் குரலொலிக்குச் செவிசாயுங்கள். அல்லல்கள்தீரும், சமாதானம்நிலவும், பக்திபற்றுதல் வளரும். ஊர்க்குழப்பங்களையும், உலகநிலைபரத்தையுங்கண்டு நிலைகலங்குபவர்களே! இவைகளுக்கு மாற்றுமருந்து மரியாயின் வழிதான். கத்தோலிக்க ஊழியத்தில் ஈடுபடும் புண்ணியசீலரே! மாதாகாட்டியுள்ள மார்க்கத்திலும் சிறந்தமார்க்கம் எங்குளது?

மாசற்றஅன்னை வெளிப்படுத்தின பத்திமுயற்சிகளை அனுசரணைக்குக்கொண்டுவர ஏற்படுத்தப்பட்ட ஒருசெபச்சேனைதான், பரிசுத்தசெபமாலைப் படையணி. இதில் அங்கத்தினராகச் சேருவோருக்குக் கட்டணமோ, சந்தாவோ ஒன்றுமில்லை. கட்டுப்பாடு எதுவுமில்லை. நிபந்தனைகள் மூன்றே மூன்று. அவை:—

1. தினமும் ஐம்பத்துமூன்று மணிச்செபஞ் செபித்தல்.
2. யாதேனும் ஒருசிறுபரித்தியாக முயற்சி தினமுஞ் செய்துவருதல்.
3. முதற் சனிக்கிழமைப்பத்தியை அநுசரித்தல்.

வசதிக்குறைவால் இவற்றில் எவற்றையேனும் ஒருவேளை செய்யத்தவறினல் குற்றமோ, பாவமோ எதுவுமில்லை. மரியாயின் மக்கள் அன்பால் உந்தப்பட்டுத் தங்கள் அன்னைக்கு அளிக்கும் அன்பின்பொருத்தனை இது. எனவே, பிரமாணிக்கமாய் இருத்தல் அன்பின் கடன். இப்படையில் அங்கத்தவராகச்சேரும் ஒவ்வொருவருக்கும் இதனல்வரக்கூடிய ஞானப்பலன்கள் யாவற்றிலும் பங்குண்டு. அங்கத்தவராக விரும்புவோர் அதற்கென்றுள்ள பத்திரத்திற் கையொப்பமிட்டுப் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும். அவர்களின் பெயர் சேனைஇடாப்பிற் பதியப்பட்டு அங்கத்துவபத்திரம் அளிக்கப்படும். ஆங்காங்கு இப்படையின் விருத்திக்காக உழைக்கும் விருத்தியாளர் தேவை. பத்து அங்கத்தவருக்குக் குறையாது சேர்ப்போர் விருத்தியாளராகப் (Promoter) பதிவு செய்யப்படுவர். குடும்பங்கள் ஒருமித்து இதிற்சேருவது மேலான கத்தோலிக்கஊழியமாகும். விபரம் வேண்டுவோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்.

The Director,
**Holy Rosary Campaign,**
HATTON.

## சுதேசவர்த்தமானம்

### பிரியாவிடை வைபவம்

கடந்த பதினைந்து வருடகாலமாக அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டத்தின் தலைவராயிருந்த வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமிஅவர்கள் தியான போதகராக வெண்ணப்புவாவுக்கு மாற்றப்பட்டிருப்பதை அறியவந்த அக்கூட்டத்தின் மகிமைஅங்கத்தவர்களும், காரியஅங்கத்தவர்களும் ஒன்றுசேர்ந்து சென்ற 12-ந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அவருக்குப் பரிமளிப்பான ஓர்பிரியாவிடைக்கொண்டாட்டம் நடத்தினர். அதற்குத் துணைமேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரும் சமுகமளித்தனர். முந்தத் துணைஆயரையும், பிரியாவிடை நாயகரையும் அங்கத்தவர்களிடையே நடுவிடமாக வைத்துப் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. பின்னர் கூட்டச்சாலையில் சுவாமியாருக்கு அங்கத்தவரால் அழகியதோர் பிரியாவிடைப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அத்தருணம் திரு. சி. டபிள்யு. டி. அல்வினஸ் அவர்கள் சுவாமியாரின் அரும்பெருந்தொண்டுகளையும், அவர் தலைவராயிருந்த காலத்திலே கூட்டம் அடைந்துள்ள முன்னேற்றங்களையும் விரிவாக எடுத்துக்கூறினர். ஈற்றில் தலைவர் சுவாமியார் எழுந்து, அங்கத்தவர்களில் காணப்படவேண்டிய தேவபக்தி, பூசைப்பக்தி, குருபக்தி, நல்லொழுக்கம், அமைச்சல் ஆதியனபற்றி வற்புறுத்திக்கூறி, தமக்கு ஒத்தாசையாயிருந்து கூட்டத்தை நடப்பித்தோருக்கும், பிரியாவிடைக்கொண்டாட்டத்தை நடத்தினேருக்கும் தமது நன்றித்துதியைத் தெரிவித்து, எல்லோர்க்கும் தமது நல்லாசி ஈந்தனர். பின்னர் சிற்றுண்டியுபசாரணையுடன் பிரியாவிடைவைபவம் இனிதே முடிவெய்தியது.

### வண. தனிநாயகம் சுவாமிகள்

தமிழ் இலக்கியகழகத்தின் செயலாளரும், தற்பொழுது அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம்செய்து திராவிடகலைப் பண்பைப்பற்றியும், தமிழ்மொழியின் சிறப்பைப்பற்றியும் சொற்பொழிவாற்றி வருபவருமான வண. சேவியர் தனிநாயகம் சுவாமிகள் M. A., D. D. அவர்களுக்கு, அண்ணமலைப் பல்கலைக்கழகம் M. Litt. என்ற இலக்கியபண்டிதபட்டம் வழங்கியுள்ளது. இப்பட்டத்திற்குச் சுவாமிஅவர்கள் முற்றிலும் அருகதையுடையவரேயென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். இவர் தமிழ்இலக்கியத்தில் மட்டுமன்றி மேனுட்டு இலக்கியங்களிலும் பரிச்சயம் உடையவர்.

### புதிய உதவிக்கோம்மிஷனர்

சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. ஏ. ஏ. யோசெவ், பி ஏ. (லண்டன்) அவர்கள் தலதாபன ஆட்சிப் புதியஜந்து உதவிக் கொம்மிஷனர்களில் ஒருவராகத் தெரியப்பெற்றிருக்கிருரென அறிந்து சந்தோஷமானேம்.

### டக்றர் ஏ. பி. சந்திரசேகர

கொழும்பிலே அரசினர் பெரிய ஆஸ்பத்திரியின் காது, மூக்கு, தொண்டை வைத்தியபகுதியின் உதவிச் சத்திர வைத்தியராக டக்றர் ஏ. பி. சந்திரசேகர, எவ். ஆர். சி. எஸ். (லண்டன்) எவ். ஆர். சி. எஸ். (எடின்பறே) அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர்.

### பம்பலப்பிட்டிக் குருமடம்

கொழும்பிலே பம்பலப்பிட்டியிலே இருந்துவந்த அமலோற்பவ மரியநாயகி சபையின் நவசந்நியாசமடம் கழுத்துறையிலிருந்து ஐந்துமைல் தூரத்திலுள்ள பண்விலாஎனும் கிராமத்துக்கு இடம் மாற்றப்பட்டிருக்கிறது. தற்போது போறளையிலே குருத்துவமாணவர்கள் இருந்துவருகின்ற குருமடம் பம்பலப்பிட்டி நவசந்நியாச மடத்துக்கு மாற்றப்படவிருக்கிறது இந்த மடம் இருக்கும் காணியை நீதிஸ்தலங்கள், சட்டக்கந்தோர்ப்பகுதிகள் அமைப்பதற்கென்று அரசினர் விலைகொடுத்து வாங்கும் விஷயமாய் இன்னுமோர் முடிவுக்கு வரவில்லை.

### சேர் ஆர். சரவணமுத்து

தமது அரசியற் சேவை, வைத்திய சேவை, சமூகசேவை ஆதியவற்றிலே பிரஸ்தாபமுற்று விளங்கியிருந்தவரான சேர் இரத்தினசோதி சரவணமுத்து அவர்கள் கொழும்பிலே சென்ற ஞாயிற்றுக்கிழமை காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயசு 63. இருபதுவருடங்கள் வரையில் கொழும்பு நகரசங்கத்தில் ஒருஅங்கத்தவராயும், மும்முறை அந்நகர மேயராயும், நகரசங்க அங்கத்தவர்களால் தெரியப்பெற்ற முதல்மேயராயும் இவர் விளங்கியிருந்தார். யுத்தகாலத்திலே இவர் பொதுசனபாதுகாப்புத் தலைவருக்கு ஆலோசகராயிருந்து, கொழும்புநகரின் பொதுசனபாதுகாப்புத்திட்டங்களை அணிவகுப்பதில் பேருதவிகள் செய்தார். 1947-ம் ஆ சோல்பறிஅரசியற்திட்ட ஆரம்பத்துடன் இவர் பகிரங்கசேவைக் கொம்மிஷனில் ஓர் அங்கத்தவராகத் தெரியப்பெற்ருர். சுதந்திர தொழிற் கட்சியை அடியிட்டவர் இவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண செம்பொன் யூபிலி

## அச்சுவேலியில் நிகழ்ந்த ஆடம்பரவிழா

சத்தியவேத சரித்திரப்பெருமை வாய்ந்த அச்சுவேலிப் பதியானது அன்று 11-9-49 ஞாயிறுவாரம் நடந்தேறிய மற்றோர் பெருமைவாய்ந்த மனோகர சம்பவத்தாலே அதிமிகபெருமிதம் கொள்வதாயிற்று. காலங்கண்ட பெரியாருள் ஒருவராய், கனகாத்திரமுடையாராய், பிரஸ்தாபம்பெற்ற உடையாராய், எவர்க்குமே உபகாரியாய், உவந்தவராய் விளங்கும் ஸ்ரீமான் வ. சின்னப்பு உடையார் அவர்களினதும், அவரது தர்மபத்தினியான ஸ்ரீமதி. அன்னம்மாவினதும் திருமண ஐம்பதாம்வருட செம்பொன் யூபிலிவிழாச் சுபவைபவத்தாலே அப்பதியும், அதன் நடுநாயகமாய் விளங்கும் அமலனின் திருக்கைத்தாதையாம் அர்ச். சூசைமாதவனின் ஆலயமும் அன்றையதினம் அளித்துநின்ற மங்கலகரமானகாட்சி பெரிதும்மாட்சியுடையதாயிற்று.

அன்றுகாலை 7-30 மணிக்குப் பலவிடங்களிலுமிருந்து யூபிலிநாயகர்களின் புத்திரர் புத்திரிகள், பௌத்திரர் பௌத்திரிகள், சுற்றத்தவர் மித்திரர்களாய்க் குருமாரும் பிறருமாகப் பெருந்திரளானோர் ஆலயத்தில் சமூகமாக, யூபிலிநாயக தம்பதிகள் பலிபீடத்தின்முன்பாக அமர்ந்திருக்க, யூபிலிநாயகியின் சகோதரரும், சம்பத்திரிசியார்கல்லூரியின் உபஅதிபருமான வண. பி. ஏ ஜோண் சுவாமிஅவர்களால், யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் அதிககாலங்கண்ட குரவரான வண. என். சந்தியாச்சுவாமியவர்களும், யூபிலிநாயகரின் மருகரும், சென்மாட்டின் குருமடத்தலைவருமான வண. சாள்ஸ் நவரத்தினம் சுவாமியவர்களும் துணைபுரிய, யூபிலிநாயகியின் மற்றோர்சகோதரரான வண. பி. பிலிப்புச் சுவாமியவர்களும், வேறு குருமாரும், சங். கன்னிகாஸ்திரீமாரும் பீடத்தின் இருமருங்கும் அமர, ஒலிபரப்பி இசைபரப்ப, யூபிலித்தோத்திர பாடற்பூசை பத்தியருட்சியாய் நிறைவேறியது. அத்தருணம் வண. எல். ஜே அகஸ்ரீன் சுவாமியவர்கள் உணர்ச்சிததும்பச் செய்தருளிய பிரசங்கத்திலே, யூபிலிவிழாத் தம்பதிகள் மேல் கடந்தஐம்பது வருடங்களிலும் சருவேசுரன் மழைபோலப் பொழிந்தருளிய திருவருட்பிரசாதங்களுக்காக் நன்றிததுதி சாற்றினார். பெறற்கரிதாய் அவர்கள் பெற்றுக்கொண்ட மக்கட்பேறாகிய பெருஞ்செல்வத்தை விதந்துபாராட்டினார். இன்றையஉலகம் இந்தப்பெரும்பாக்கியமாகிய பிள்ளைப்பாக்கியத்தை அவமதிப்பதால் உண்டாயிருக்கும் பெரும்நிர்ப்பாக்கியங்களை எடுத்துக்காட்டினார். ஈற்றில் விழாநாயகர்களுக்கு யூபிலிச்சோபனமும, ஆசீர்வாதமும் கூறினார். அதன்மேல் "தெதேயும்" எனும் தேவதோத்திரகீதம்பாடித் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பெற்றுத் தம்பதிகள் இருவரும் ஆலயத்தைவிட்டு வெளிக்கொண்டபோது, செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் புஷ்பாரஞ்சூட்டிநிற்க, அங்கு சமூகமானோரெல்லாம் அவர்களுக்குச் சோபனங்கூறிநின்றார்கள்.

அன்று பகல்முழுவதும் பலவிடங்களிலிருந்தும் குரவர்களும்பிறருமாகப் பிரபலஸ்தர்கள் பலரும்வந்து தம்பதிகளைச்சந்தித்துச் சோபனங்கூறிச் சென்றவண்ணமிருந்தார்கள். யாழ்ப்பாண முதன்மேற்றிராணியார், துணைமேற்றிராணியார் உட்பட யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி முதலாம் இடங்களிலிருந்து பிரமுகர்கள்பலரும் அநேக சோபனகடிதங்களும், சுமார் 150 சோபனதந்திகளும் அனுப்பியிருந்தார்கள். உருமத்தின்போது தம்பதிகளை முதலிடமாகக்கொண்டு, சமூகமளித்திருந்தாருக்கெல்லாம் ஓர்சம்பிரம விருந்தளிக்கப்பட்டது. அத்தருணம் பலரும் யூபிலிநாயகர்கள் மட்டில் தமக்குள்ள அன்பைப்பாராட்டிப் பொற்கிழிகள் வழங்கினார்கள்.

பிற்பகல் 5 மணிக்கு விழாநாயகர்களை நடுவிடமாகக்கொண்டு அவர்களின் மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், குருசுற்றத்தவர்கள் புடைசூழ்ந்து நிற்கப் பிரதிமைப்படங்கள் பிடிக்கப்பட்டதன்மேல் பலவர்ணதுவசங்களாலும், அழகியமின்சாரதீபங்களாலும் அலங்கரிக்கப்பெற்றுத் தேசோமயமாய் விளங்கிய யூபிலிவிழாமனையின் முன்புறமைதானத்திலே பாராளுமன்றக் கோப்பாய்ப்பிரதிநிதி, யாழ்ப்பாணநீதிபதி, குருப்பிரசாதிகள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், ஊர்ப்பெரியமனுஷர்கள் பெருந்திரளாகக் குழுமியிருந்து வாத்தியவரிசைகள், கரகோஷங்கள் மத்தியில் தம்பதிகளை வரவேற்றுநிற்க, ஷெவாலியர் சிற்றம்பலம் காடினர்அவர்களும், அவர் தாயாரும் இருவருக்கும் நறுமலர்மாலைகள் சூட்டினார்கள். அதன்மேல் ஷெவாலியர் சிற்றம்பலம் காடினர்அவர்களின் தலைமையிலே வரவேற்புவிழா ஆரம்பமாயிற்று. அத்தருணம் வலிகாமம்வடக்கு-கிழக்கு டி. ஆர். ஓ. திரு. முருகேசபிள்ளை அவர்கள் எழுந்து, யூபிலிநாயகர் முப்பதுவருடங்களுக்குமேல் அச்சுவேலிஉடையாராயிருந்து அரசினருக்கும், பொதுசனருக்கும்ஆற்றிய சிறந்தசேவைகளை விரிவாக எடுத்துக்காட்டினர். அவர் வலிகாமம்வடக்கு-கிழக்கு ஐக்கிங் மணியகாரனாய் 71 முறை நியமனஞ் செய்யப் பெற்றதிலிருந்தும், அவரது தீரத்துவ அருஞ்செயல்களைப்பாராட்டி அரசினர் 40 முறை வெகுமானமளித்துச் சன்மானித்திருப்பதிலிருந்தும், அவரது உத்தியோககாலத்திலே அவருக்குரிய பதிவுபுத்தகத்தில் அவரைப்பற்றிநயமான எழுத்துகளே அல்லாமல் குறைவானஎழுத்து ஒன்றுமே இலலாதிருப்பதிலிருந்தும், அவர்உடையார் பதவியிலிருந்து இளைப்பாறிய போதிலும் அச்சுவேலி, புத்தூர்க் கோவிற்பற்றுகள் இரண்டிலுமே இன்னும் பிஸ்கால்கடமையும், கொறணர் விசாரணையும் திறமையுடன் நடத்திவருவதிலிருந்தும் அவர் யாழ்ப்பாணப்பகுதி உடையார்மாருள்ளெல்லாம் அதிகந் தகைமைவாய்ந்தவரெனப் புகழ்மாலை சூட்டிச் சோபனங்கூறினர். அதன்மேல் திக்கம் செல்லையா அவர்கள் பேசுகையில்: தாமும் யூபிலிநாயகரும் சுற்றத்தவரென்றும், அவர் ஓர் கிறீஸ்தவராயும், தாம் ஓர் சைவராயும் இருந்தபோதிலும் தங்களுள் வேற்றுமையேகிடையாதென்றும், அச்சுவேலியிலே கிறீஸ்தவர்களும், சைவர்களும் என்றைக்கும் சமாதானமாக வாழ்ந்துவந்திருக்கிறார்களென்றும், யூபிலிநாயகர்களின் குடும்பத்தையிட்டுத் தமக்குள்ள மதிப்போ பெரிதென்றும்கூறி அன்னாரை வாழ்த்தலாயினர்.

ஷெவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் பேசியவிடத்து: யூபிலிநாயகர் கடந்த ஓர் நூற்றாண்டுக்குமேல் உடையார்மாராயிருந்த தம் முன்னோரின் பரம்பரையில் உடையார்பதவி வகித்தனரென்றும், இவர் சகோதரர் சூசைப்பிள்ளை உடையாரும், இவர் தந்தையார் வஸ்தியாம்பிள்ளைஉடையாரும், தந்தையாரின் மாமனார் சந்தியாப்பிள்ளை உடையாரும் இவருக்குமுன் அப்பதவியைத் தொடர்பாக வகித்திருந்தனரென்றும், யூபிலிநாயகர் மணஞ்செய்ததும் அதேபதவிவகித்து இளவாலையிலே பிரபலம்பெற்றிருந்த வஸ்தியாம்பிள்ளை உடையாரின் புதல்வியையேயென்றும், இவர் தமது உத்தியோக கடமைகளைப் பார்ப்பதிலே அல்லும்பகலும் அயராதுழைத்த காலத்தில் இவரது தர்மபத்தினியானவர் குடும்பகடமைகளைக் குறைவறக் கவனித்துப் பிள்ளைகளைத் தேவபத்தியிலும், சன்மார்க்கத்திலும் சீராய்வளர்த்து நாலுபேரும் மதிக்கக்கூடிய வகையிலே மனிதராக்கிவைத்தாரென்றும், அவர்களுக்குள்ள செல்வம் செல்வாக்கு அதிகமென்றும் எவருமே பிரமிக்கத்தகுந்தவகையில் எடுத்துக்கூறி அவர்களைப் புகழ்ந்துகொண்டாடினர்.

அதன்மேல் ஆசிரியர் இராசரத்தினம் அவர்கள் அச்சுவேலியிலுள்ள கத்தோலிக்கரல்லாத கிறீஸ்தவர்களின் சார்பாகப்பேசி, அவர் சாதிமதபேதம்பாராது எவர்க்குமே உகந்தமுறையில் நடந்துகொண்டாரென்றும், அவர் அப்பகுதிக்கு ஓர் தலைமையான மனுஷரென்றும் பாராட்டிப்பேசினர். "சத்தியவேத பாதுகாவலன்" பத்திராசிரியர் எழுந்து: யூபிலிநாயகதம்பதிகள் பொதுவாகத் தமிழுலகினதும், சிறப்பாகக் கத்தோலிக்கதமிழுலகினதும் அபிவிர்த்திக்கும் முன்னேற்றத்துக்குமாகத் தங்கள்பங்கைச் சிறப்பாக அளித்திருக்கின்றனரென்றும், நன்மையாகத் தங்களைவளர்த்துச் சனசமூகத்திலே தங்களை மனுஷராக்கிவைத்த தங்கள் பெற்றாருக்குத் தங்கள் அன்பையும் நன்றியறிதலையும் பகிரங்கமாகக்காண்பிக்க அவர்களின் செல்வமக்கள் இந்தப்பொன் யூபிலிவிழாவை ஓர் பொன்னான தருணமாகக்கொண்டு அத்துணைபெரும் ஆடம்பரமாய் அதனைக் கொண்டாடுவது போற்றற்பாலதென்றும், யூபிலிநாயகர்கள் இன்னமும் நீடியஆயுளுடனும், கூடிய சுகபலத்துடனும்வாழ்ந்து இந்தப்பொன் யூபிலியைக் கண்டதுபோலவே வைரயூபிலியையும் கண்டுகளிக்க எம்பெருமான் கருணைபாலிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டு, யாவர்பேராலும் அன்னாருக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் சோபனங்கூறிநின்றார்.

அதன்மேல் தம்பதிகள் அழகுறச் சிங்காரிக்கப்பெற்ற ஓர் மோட்டர்ரதத்திலே வாத்தியவரிசைகளோடும், வாணவேடிக்கைகளோடும் ஆலயமைதானத்துக்குப் பெரியஊர்வலமாக அழைத்துக்கொண்டு போகப்பெற்று அங்கு வெகுதிறமையாக நடாத்தப்பெற்ற "கருங்குயில்குன்றத்துக்கொலை" எனும் சிறந்தநாடகத்தைப் பல்லாயிரவர் சமேதராகப்பார்த்து ஆனந்தித்ததோடு யூபிலிவிழா இனிதே நிறைவெய்திற்று.

# "புதுநன்மைக்கான பாடத்திட்டம்"

கத்தோலிக்க பாடசாலைகளிலே பிள்ளைகளைப் புதுநன்மைக்கு முஸ்திப்புச் செய்வதற்கென்றே பிரதானமாக இப்புத்தகம் எழுதப்பட்டது. இந்த முஸ்திப்பு இருவருடங்களில் ஆகவேண்டியவிதமாய் இதிலே தரப்பட்டிருக்கிறது.

ஒவ்வோர்வருடப் படிப்பின்விஷயமும் வாரம் ஒன்றுக்கு 5 பாடங்களாக 35 வாரங்களுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. விளக்கிக்காட்டவேண்டிய ஒவ்வோர்வாரத்தின் பாடப்பொருளும் அதன்பிரதான கருத்தும், அந்தவாரத்தின் காரியக்கிரம சூசிகையின்மேலே தரப்பட்டிருக்கின்றன.

கீழேயுள்ள ஐந்து பத்திகளிலும் (1) ஒவ்வோர் வாரத்தின் அடிப்படையான விஷயமும் (2) அந்தந்தநாட்பாடத்தின் பொருளுக்கு இசைந்த வேதாகமசரிதைகளும் (3) மனப்பாடமாகப் படிக்கவேண்டிய ஞானோபதேசப் பாடங்களும் (4) படிக்கவேண்டிய செபங்களும் (5) வியாக்கியானத்தின் சுருக்கமும், அனுசாரணைப்புத்திமதிகளும் அடங்கியிருக்கின்றன

பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் இலகுவில் விளக்கமாகப் படிப்பிக்க இந்தப்பாடத்திட்டம் மிகவாய்ப்பானது. ஞானோபதேசபாடத்தில் அவர்களுக்கு மிகுந்தஆவலையும் மேலானகரிசனையையும் உண்டுபண்ணக்கூடியது.

குருமார், ஆசிரியர், உபதேசிமார், மரியாயின்சேனையார், மற்றும் கத்தோலிக்கசேவையில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஓர் அருமையான கைத்துணை இதுவாகும்.

பிரதி விலை சதம் 90.

கிடைக்குமிடம்:

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,

யாழ்ப்பாணம்.

## நானசங்கதிகள்

—சமீபத்திலே காலஞ்சென்ற கருதினல் சூகாஆண்டவரினிடமாகப் பரீஸ் நகரின் புதியஅதிமேறறிராணியாராகப் போடோநகர் அதிமேற்றிராணியாராயிருந்துவந்த மோறிஸ் பெல்ரன் ஆண்டவர் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவருக்குத் தற்போது வயசு 67.

—இருபதுலட்சம் ஜேர்மன் யுத்தகைதிகளை ரூஷியர் இன்னுமே விடுதலை செய்யாது வைத்திருப்பதாக ஐரோப்பிய விஷயங்களை ஆராய்ந்துவரும் சர்வதேச கொம்மிற்றி அறிக்கையிட்டிருக்கிறது. இந்த யுத்தகைதிகளை ரூஷியர் என்னசெய்தார்களென்பதை அறிவிக்கிறவரையிலே நேசதேச படைகளை ஜேர்மனியிலிருந்து அகற்றுவதை இந்தக்கொம்மிற்றி ஆட்சேபித்திருக்கிறது.

—யேசுக்கிறீஸ்துநாதர் மனுக்குல இரட்சணியத்துக்காக ஓர் வெள்ளிக்கிழமையிலே சிலுவையில் மாணித்த காரணமாகக் கத்தோலிக்கமக்கள் வருடத்தில் 52 முறை மாமிசபோசனத்தை விலக்கி அந்தநாளை ஞாபகப்படுத்தியும், கனப்படுத்தியும் வருகின்றார்கள்.

—தங்கள் பிழைப்புக் காரணமாகக் காலையிலே பூசைகாண முடியாமலிருப்பவர்களின் வசதியைக்கோரி ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன்திருநாட்களிலும மாலைவேளை திவ்வியபூசை நிறைவேற்றவும், தேவநற்கருணை கொடுக்கவும் பம்பாய் அதிமேற்றிராசனத்துக்குப் பரிசுத்தஸ்தானம்விசேஷ அனுமதிவழங்கியிருக்கிறது.

—1950-ம் ஆண்டு ஆவணிமாதம் 6-ந்திகதி யப்பானியதேச ஹிரோஷிமாநகரில் வீசப்பட்ட அணுக்குண்டாலே 2,10,000 பேருக்கும், 2,40,000 பேருக்குமிடைப்பட்ட தொகையான யப்பானியர்கள் கொல்லப்பட்டதாக அந்நகர்மேயரான திரு. ஹிம்சோஹமாய் கூறுகின்றார். ஆனால் 70,000 பேருக்கும் 90,000 பேருக்குமிடைப்பட்ட தொகையான யப்பானியரே கொல்லப்பட்டார்களென்பது அமெரிக்கவரசின் மதிப்பாகும்.

—ஐக்கியநாடுகளின் ஸ்தாபன சமாதான ஸ்தாபனங்களின் செலவு அடுத்து நிகழும் 1950-ம் ஆண்டில் பத்துலட்சம் டலருக்குச் சற்றேகூடியதாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே பாதுகாப்புச்சங்க பரிபாலன பகுதிக்கு மாத்திரம் 8,24,700 டலரும், இராணுவ தலைவர்களின் கொம்மிற்றிக்கு 1,98,900 டலரும் செலவேற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களங்கள்...

ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ. பி. எல்;

இவ்வுலகத்தில் போர்இல்லாத இடமே இல்லை. காட்டிலே விலங்கோடு விலங்கு போரிடுகின்றது. எளியவிலங்கை வலியவிலங்கு கொல்லுகின்றது. நீரில் மீனோடு மீன் போராடுகின்றது. சிறியமீன் பெரியமீனுக்கு இரையாகின்றது. நாட்டிலே அரசும் அரசும் போராடுகின்றன. எளியவர் நாட்டை வலியவர் கவர்ந்து ஆளுகின்றனர். படை வலிமையுடைய நாடே சிறந்த நாடாக மதிக்கப்படுகின்றது.

முற்காலத்தில் தமிழ்நாட்டில் வீரர்கள் மலிந்திருந்தார்கள். அவரை மறவர்என்று தமிழ்நாடு போற்றிப்புகழ்ந்தது. மறவர் அஞ்சாத நெஞ்சினர்.

"உச்சிமீது வான் இடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை, அச்சமில்லை
அச்சமென்பதில்லையே"

என்று பாடிக்கொண்டு போர்க்களம் செல்லும் பாண்மையாளர். இவர்களில் ஆண்களும் பெண்களும் வீரம்வாய்ந்து விளங்கினார்கள்.

இத்தகைய மறக்குடியில் தோன்றினாள் ஒரு மங்கை. தன் மனப்பான்மைக்கேற்ற வீரன் ஒருவனை மணந்து ஒரு வீரக்குழந்தையைப் பெற்றாள். அவள் தமையனும் ஒருதீரன். இவர்கள் ஒருகுடும்பமாக இன்புற்றுவாழ்ந்து வருகையில் நாட்டிலே பெரும்போர் மூண்டது. போர்முழக்கம் கேட்டபோது அம்மங்கையின் தமையன் போர்க்கோலம்பூண்டு அமர்க்களம் போந்தான். கண்டோர்வியக்கக் கடும்போர் புரிந்தான். மாலைப்பொழுதில் மார்பிலே அடிபட்டு இறந்தான். மறுநாட்காலையில் போர்ப்பறை மீண்டும் வீரரைப் போருக்கு அழைத்தது. உடனே அம்மங்கையின் கணவன் போருக்குக் கிளம்பினான். அமர்க்களம் புகுந்து அரும்போர் புரிந்தான். செருக்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ்கொண்டான். பொழுதுவிடிந்தது. மறுபடியும் போர்ப்பறை முழங்கிற்று. மங்கை எழுந்தாள். தன் குழந்தையை அழைத்தாள். அவன் தலையில் எண்ணெய்தடவிச்சீவினாள். வெளுத்து வைத்திருந்த ஆடையைவிரித்து உடுத்தினாள். வேலாயுதத்தைக் கையிலே கொடுத்தாள். இளம்பாலனைப் போர்க்களத்திற்கு அனுப்பினாள். முதல்நாள் தமையன் இறந்தான் என்றும் தளராது, மறுநாள் கணவன் இறந்தான் என்றும் கலங்காது, தன் குடும்பத்திற்கு ஒரு மைந்தனே உள்ளான் என்றும் உணராது, இளம்பாலனைப் போருக்கு அனுப்பிய பெண்மணியின் வீரத்தை மாசாத்தியார் என்னும் பெண் புலவர் பாராட்டிப் பாடியுள்ளார்.

## வீரத்தாய்

மற்றொரு வீரத்தாய் போர்க்களத்தில் தன்மகன் பகைவர்க்குப் புறங்காட்டி ஓடினான் என்று கேள்வியுற்றாள். பொங்கி எழுந்தாள். கொடியவாளைக் கையில்எடுத்தாள். "என்மகன் போர்க்களத்தில் புறங்காட்டி ஓடினான் என்பது உண்மையானால் அப்பேடிக்குப் பாலூட்டிய மார்பை இவ்வாளால் அறுப்பேன்" என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் புகுந்தாள். அங்கேகிடந்த பிணங்களிடையே நடந்துசெல்லும் பொழுது தன்மகனது உடலைக் கண்டாள். முகத்திலும் மார்பிலும் அடியுண்டு சிதைந்துகிடந்த அவ்வுடலைக் கண்டபோது அவனைப் பெற்றபோது அடைந்த இன்பத்திலும் பெரியதோர் இன்பம் பெற்றாள்.

இனி மற்றொருபோர்க்களம். கலிங்கம் என்னும் நாட்டின்மீது கருணாகரத் தொண்டைமான் படையெடுத்தான். ஆண்மைநிறைந்த வீரர்கள் அணிபணியாகத் திரண்டு எழுந்தார்கள். போர்ப்பறைகேட்டுப் பொங்கி எழுந்த வீரன்ஒருவன் போர்க்கோலம் புனைந்து தன் மனையாளிடம் விடைபெறச்சென்றான். வீரக்கோலத்தில் தன் கணவனைக் கண்டமங்கை, அவ்வழகைக் கண்ணாலப்பருகிக் களிப்புற்றாள். தலைவனது பரந்தமார்பினைப் பார்த்தாள். நிமிர்ந்த தோள்களை நோக்கினாள். அத்தோளில் அமைந்த வாளின் ஒளியைக்கண்டாள். அளவிறந்த இன்பமும், பெருமையும் அடைந்து வீரக்கணவனுக்கு விடைகொடுத்தனுப்பினாள். போர்க்களம் போந்த காதலன் மாற்றாரைவென்று விரைவில் வருவான்என்று அவன் சென்ற வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள். வீரன்மீண்டு வருவதாகக் குறித்திருந்த நாளில் அவன்வரவில்லை. மேல் ஒருநாள்சென்றது. சிலநாள் சென்றன. மனத்துயரம் பொறுக்கமாட்டாத மங்கை போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டாள். அங்கே கால்மாடு தலைமாடாய் வீரர்கள் சாய்ந்துகிடக்கக்கண்டாள். அவர்கள் உடம்பினின்றும் பாய்ந்தகுருதி ஆறாக ஓடிற்று. முகத்திலும் தோளிலும் பசும்புண்பட்டுக் கிடந்தார் சிலர். மடித்த வாயொடு மாண்டுகிடந்தார் சிலர். இவ்வாறு விழுந்துகிடந்த வீரருள்ளே அம்மங்கை தன் கணவனைக் காணாது மயங்கினாள். அவன் என்னாயினான்என்று கேட்டறிவதற்கு அமர்க்களத்தில் யாருமில்லை. அந்நிலையில் வீரர்வணங்கும் தெய்வத்தை வினவலுற்றாள்.

"பொருதடக்கை வாள் எங்கே?
மணிமார் பெங்கே?
போர் முகத்தில் எவர்வரினும்
புறங் கொடாத
பருவயிரத் தோள் எங்கே?
எங்கே என்று........

"தெய்வமே! என் கணவனுடைய வலிமைசான்ற கைஎங்கே? அக்கையிலமைந்த வாள் எங்கே? மாற்றார்க்குப்புறங்கொடாத மணிமார்புஎங்கே? எங்கே?" என்று மங்கை கேட்கின்றாள்.

இனிக்கடைசியாக, நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழ்நாட்டில் நிகழ்ந்த ஒருவீரத் தியாகத்தைக் காண்போம். பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரன் சேனைக்கும், மற்றொரு சேனைக்கும் போர்நடந்தது. பாளையக்காரன் தம்பியாகிய ஊமைத்துரை என்பவன் அச்சேனையைஎதிர்த்துப் போர்செய்தான். பகல்முழுவதும் போர்நடந்தது. அந்திமாலை வந்தடைந்தபோது மாற்றார் சேனை வெற்றிபெற்று மீண்டது. பாளையக்காரன் சேனையில் பலர்விழுந்துகிடந்தார்கள். பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து போர்புரியச் சென்றிருந்தவீரன் ஒருவன் திரும்பிவரக்காணாத அவன் தாய், இருட்டிலே மகனைத் தேடப் புறப்பட்டாள். போர்க்களத்தில்கிடந்த பிணங்களை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்தாள். நெடுநேரம் தேடித்திரிந்து தன் மகனைக் கண்டாள். அவன் படுகாயமடைந்து குற்றுயிராய்க் கிடந்தான். உயிரோடு தன்மகனைக்காணும் பேறுபெற்றவீரத்தாய் மனங்குளிர்ந்து அவனை வீட்டுக்கு எடுத்துச்செல்ல விரும்பினாள். அப்பொழுது அவ்வீரன்: "தாயே, என்னை எடுத்துச் சென்று காப்பாற்றுவதனால் என்ன பயன்? நம் படைத்தலைவராகிய ஊமைத்துரை அதோ, குற்றுயிராய்க்கிடக்கின்றார். அவரை எடுத்துக் கொண்டுபோ. அவர் பிழைத்தால் நம்மெல்லோர்க்கும் நலமாகும்" என்று இரக்கமாக வேண்டினான். அவ்வுரை கேட்டதாய் உருகினாள். தன்மகனது அரும்பெருந்தியாகத்தை மெச்சினாள். அவன் விரும்பியவாறே ஊமைத்துரையைக் கண்டு எடுத்துச்சென்று காப்பாற்றினாள்.

# சுதேச வர்த்தமானம்

## கார்மேல்மாதா தருமபந்தி

இப்பந்தியின் வருடாந்தக் கூட்டம் இம்மாசம் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6-00 மணியளவில் கார்மேல் கூட்டச்சாலையில் மகாவந். துணைமேற்றிராணியாண்டவர் தலைமையில் நடைபெறும். அத்தருணம் வண. J. A. பிரான்சீஸ் சுவாமியவர்களால் ஒருஉபந்நியாசம் செய்யப்படும். அவ்வேளை சகோதரபந்தியினர், பக்திக் கூட்டத்தினர், உபகாரிகள், அபிமானிகள்யாவரும் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## பயங்கர பஸ்விபத்து

யாழ்ப்பாணம் - அநுராசபுரம் - திரிகோணமலைப் பாதையில் ஓடித்திரிந்த யாழ்ப்பாண பஸ்கம்பெனியைச்சேர்ந்த பஸ்ஒன்று சென்ற வெள்ளிக்கிழமை மாலை மிகுந்தலையிலே பாதையைவிட்டு விலகிச்சென்று, பாறைஒன்றில் மோதி விபத்துக்குள்ளானபோது அதிலே சென்றவர்களில் சாரதிஉட்பட மூவர் அதேயிடத்தில்தானே மரணமடைந்தனர். ஏனைய 35 பிரயாணிகளும் காயமடைந்தனர். இவர்களில் 13 பேர் அபாயகரமானநிலைமையில் அநுராசபுர ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கும் இருவர் மரணமடைந்தனர். இந்தப்பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் அநுராசபுரம் போய்ச்சேர்ந்து பின்னர் திரிகோணமலைக்குச் செல்லவேண்டியது. நீதிபதியால் விசாரணை செய்யப்பட்ட சில பிரயாணிகள் கூறியுள்ளபடி, திரிகோணமலைக்குப் புறப்படுமுன் சிவம் என்ற சாரதியும், வேறிருவரும் மதுபானம் அருந்தினராம். விபத்துநடக்கச் சற்றுமுன்னாக வேகந்தெரிவிக்கும் கருவியின்படி, அப் பஸ்வண்டியின் வேகம் மணித்தியாலம் 40 மைலுக்குமேல் இருந்ததென்றும் அவர்கள் கூறினார்கள். ஓர்முடக்கால் திரும்பும்போது பஸ் பாதையைவிட்டு விலகி ஆழமான கான்வழியாகச் சற்றுத்தூரம் சென்று அப்பால் புரண்டுகொள்ளவே அநேக பிரயாணிகள் அதன்கீழ் அகப்பட்டுக் கொண்டார்கள்.

## யாழ்ப்பாண நகரசங்கம்

யாழ்ப்பாண நகரசங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் சென்ற 10-ந்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் சங்கமண்டபத்திலே மேயர் சாம். ஏ. சபாபதிஅவர்கள் தலைமையில் நடந்தேறியது. அதில் நிறைவேறிய முக்கிய பிரேரணைகள் வருமாறு: (1) "யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்களைப் பார்க்கவென்று குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் போகிறவர்கள் கேற்வாயிலிலே வெயிலுக்கோ, மழைக்கோ தங்க இடமின்றி அந்தரிப்பதால் அவர்கள் தங்குவதற்கென வாயிலின் இருபக்கங்களிலும் தற்காலீகமாகவேனும் இருகொட்டில்களை ஆஸ்பத்திரிவளவில் அமைக்கும்படி சுகாதார மந்திரியாரை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது." திரு. பி. எம். ஜோண் அவர்கள்கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக அரங்கேறியது.

## செலவிலும் கூடிய வருமானம்

நமது அரசினருக்குச் சென்ற ஆவணிமாசம் கிடைத்த வருமானத்திலே செலவுக்குக்கண்டு 1 கோடியே 36 லட்சம் ரூபா எஞ்சியிருக்கிறது. சென்ற மாசத்திலே மொத்தமாகக் கிடைத்த வருமானம் 4 கோடியே 93 லட்சம் ரூபா. சென்ற செலவு 3 கோடியே 56 லட்சத்து 92 ஆயிரம் ரூபா. துறைமுகத்தீர்வைகளிலிருந்தே அதிக வருமானம் கிடைத்திருக்கிறது.

தனக்கெனவந்த தண்ணீரைத் தன்னிலும் தாகமுடைய ஒரு போர்வீரனுக்கு அளித்து அழியாப் புகழ்பெற்றார் ஓர் ஆங்கிலவீரர். தன்னுயிர் காக்கவந்த தாயைத் தலைவனிடம் அனுப்பி அவனுயிரைக்காத்து, தன்னுயிரைத்துறந்த வீரன் தியாகம் வியக்கத்தக்கதன்றோ! இத்தகையவீரரை வியவாதார் யாரே?

# அர்ச். இசிதோர் திருநாள்

முருங்கன் பதியிலே கோயில்கொண்டெழுந்தருளி இருக்கும் கிறீஸ்து இராசாவின் ஆலயத்தில் அர்ச். இசிதோர் திருநாள் வழமைபோல் புரட்டாசிமாசக் கடைசி ஞாயிற்றுக்கிழமை (25-9-49) நடைபெறும்.

24-9-49—மாலை ஆராதனை
25-9-49—பாடற்பூசையும், சுற்றுப்பிரகாரமும

கமக்காரரின் பாதுகாவலராகிய அர்ச். இசிதோரின் அடைக்கலத்தில் எங்கள் முயற்சிகளை வைப்போமாக.

முருங்கன், கட்டளைக்குரு.
12-9-49.

# மரியாயின் பிரான்சீஸ்கன் சந்நியாசசபை ஸ்தாபகம்

இற்றைக்குப் பல வருடகாலமாகமகோணவில்ஸ்தாபிக்கப்பட்டிருந்த "பிரான்சீஸ்கன் சகோதரர்" என்ற சந்நியாசசபையில் கடமையாற்றிவந்த தமிழ்பேசும் சந்நியாசிகளின் விருத்தியையும், கத்தோலிக்கமக்களின் நன்மையையும், வாலிபரது தேவ அழைத்தல் அதிகரிப்பையும் மேற்கொண்ட மகாமேன்மை தங்கிய கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர் பரிசுத்த பாப்பாண்டவரின் அனுமதிபெற்று மகாவந். கண்டி மேற்றிராணியாண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்.

1949-ம்ஆண்டு ஆவணிமாதம் 22-ம் திகதி அர்ச். மரியாயின் மாசற்ற இருதயத்திருநாளில் மாத்தளை அர்ச். தொம்மைஅப்போஸ்தலர் ஆலயத்தில் கண்டிநகர் மேற்றிராணியாரான மகா வந். வேணுட் றெஞ்ஞோ ஆண்டவரால் **"மரியாயின் பிரான்சீஸ்கன் சந்நியாச சகோதரர்"** என்ற பெயருடன் ஓர்சபை ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சபையில் தற்போது பதினலு சகோதரர் இருக்கிறார்கள். இவர்கள் மாத்தளை, சிலாபம், மகோண என்றவிடங்களில் கல்விகற்பித்தல், கைத்தொழில் பயிற்றல். அநாதபிள்ளைகளைப் பராமரித்தல், விடுதிப்பாடசாலைப் பிள்ளைகளைக்கவனித்தல் முதலிய தொண்டுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தமிழ்ப்பாஷை வழங்கும் இலங்கை; இந்தியா முதலியநாடுகளிலுள்ள வாலிபர்கள் இச்சபையிற் சேரவிரும்பினல் தங்கள் ஆத்தும குருமாரின் சிபாரிசுடன் சபை அதிசிரேஷ்டருக்கு எழுதுமிடத்து ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

அதி சிரேஷ்டர்,
**சங். சகோதரர்**
**ஈ. மேரி ஜோசப், எப். வீ. எம்.**
மரியாயின் பிரான்சீஸ்கன் சகோதரர்,
மாத்தளை, இலங்கை.

—ருஷிய கம்யூனிஸ்த தலைவர்களான லெனின், ஸ்ராலின் என்பவர்கள் எழுதியுள்ள நூல்களைப் போலிஷ் பாஷையிலே வெளியிடப் போலாந்த கம்யூனிஸ்தர்கள் ஆயத்தப்படுகின்றார்கள். போலிஷ் மாணவர்கள் இந்த நூல்களைப்படிக்கும்படி கட்டாயஞ் செய்யப்படுவார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைரிய இராயன் நாடகம்

—[ நாட்டுத்தூதன் ]—

இஃது 1900-ம் ஆண்டளவில் மாங்குவடக்கு, கருங்கண்டல் சூசைப் புலவர் அவர்களால் இயற்றப்பட்டது. கத்தோலிக்கசமயத்தைக் கணிப்பாகக் கொண்டுள்ளது. தைரியஇராயனுக்கும், அவர்மருகன் மருக்குலீனுக்கு மிடையே ஸ்ரீதனவிஷயமாக நடந்த பெருஞ்சமரையும், ஈற்றில் சில்வேஸ்திரி பாப்பானவரால் ஞானதீட்சைபெற்றுத் தைரியமன்னன் சத்தியமறையைத் தழுவியதையும் இதுவிரிவாக எடுத்துக்கூறுகின்றது. இதன் கையெழுத்துப்பிரதியிலிருந்து ஆரம்பபாக்களைப் பிரதிபண்ணி அனுப்புகின்றேன்.

### காப்பு

பூவுல காசனென்னப் பொலிந்தபொன் மகுடஞ்சூடித்
தேவுல காசனுதி திருநவக் காட்சிகண்ட
காவலன் தைரியராசன் கதையைநா டகமாய்ப்பாட
நாவலன் தருமிஸ்பிரீத்து நாதன்றுள் காப்புத்தானே.

ஊர்வளஞ் செழிக்கும்நீதி ஞ்ரேமையில் வீற்றிருந்து
ஏர்வளஞ் செழிக்கச்செங்கோல் இயற்றுமா தைரியவேந்தன்
பார்வளர் காதைதன்னைப் படியில்நா டகமாய்ப்பாடக்
கார்வளர் கருணைகூரும் கத்தன்றுள் காப்புத்தானே.

மலர்தலை உலகெலாமோர் மதிக்குடை நிழற்றிரேமை
தலைநகர் வதிந்துஆண்ட தைரிய ராசன்காதை
பலநார் மகிழவிந்தப் பாரில்நா டகமாய்ப்பாட
அலகிலா னந்தஞான அற்புதன் காப்புத்தானே.

பாந்தபூ வுலகமீது பார்த்திபன் மருக்குலீனு
உரம்பெறு தைரியமன்ன னுடன்சமர் புரிந்தகாதை
ஆரங்கில்நா டகமாய்யானும் ஆனசெந் தமிழாற்பாடப்
பாண்பிதா குமாரிதிங்கட் பாதபங் கயங்காப்பாமே.

### தோடயம்

பொன்பொலிசெம் பைம்பொன்னேம் பொன்கதிர்பொங் கிரணமுடி
புனைந்துலகாள் தைரியமன் புகழ்சரிதை பாட
என்பொலிகேட் டெசக்கியெல்முன் னிறந்தஉடற் காவிபுகுந்
திருக்கநவங் காட்டுமென்கோன் றிருப்பதங்காப் பாமே.

அன்னகரை யாள்தைரிய மன்னன்சத்திய வேதமதை
அகற்றியா சாண்டகதை ஆனதைப் பணபாட
தன்னுருவி லாஅருபி மன்னுயிருக் காகமனுச்
சந்தமுற வருதேவ தந்தைசுதன் துணையே.

கற்புநிறை மகள்தன்னைக் காவலனும் மருக்குலீனுக்
கரியமணஞ் சூட்டிவைத்த காதைதன்னைப் பாட
முற்றலைவா ருதிமீது முத்தனுஞ்சம் பேதுருவை
மோசமறக் காத்தவரு நேசகத்தன் துணையே.

மண்டலத்தை யாளுமுடி மன்னன்தை ரியராயன்
மருமகனுக் கானபுத்தி வழுத்துகதை பாட
அண்டருல கோரனைத்து மாரணங்கேட் டகமகிழும்
அற்புதஞ்சேர் தேவகன்னி பொற்சரணந் துணையே.

அன்புசெறி மருக்குலீனுக் காகமகிழ் முடிசூட்டி
அழகுயரிஸ் பாஞ்ஞநா டனுப்புகதை பாட
துன்பமுட னின்பமில்லாத் தூயஅருட் கொடைநாதன்
சொர்ணபத மதைநிதநாம் தோத்திரஞ் செய்வோமே.

வண்டிமிரு மரியவணி மன்னன்மருக் கிலீனுதுரை
மாமனா சுடன்தர்க்க மானகதை பாட
தண்டவநேர் தவத்திறைவன் தவிதிறைகோத் திரத்திலதன்
சந்தமரி துணைவனுஞ்சஞ் சூசைதாள் துணையே.

மண்ணுலகாள் ஞ்ரேமைமுடி மன்னன்அமர் புரியவரும்
வழியதனிற் காட்சிகண்ட வளமைதன்னைப் பாட
விண்ணுலக வழிகாட்டு வேதஅருட் தீபமெனு
மிஸ்பிரீத்துச் சாந்துவெனும் ஈஸ்வரன்றுள் துணையே.

அட்டதிக்கும் போற்றதிப னுந்தைரிய மன்னனுக்குக்
குட்டமுற்றுச் சுகமடைந்த குணமதனைப் பாட
வட்டமுறுந் தென்னிலங்கை மானகரை ரட்சைபுரி
மாதவனும் சம்பிலீப்பின் பாதமலர் துணையே.

மாதவஞ்சேர் சிலுவேஸ்திரி மாகுரவர் தனையாசன்
வாவழைத்திஸ் நானமுற்ற வழமைதனைப் பாட
மீதலா யிலிருந்தருள்செய் மேன்மைசேருஞ் சிஷ்ட
வேதசாட் சிகளைநிதம் வேண்டுதல்செய் வோமே.

(தொடரும்)

## ஆசிரியரும் சேனற்சபையும்

அடுத்தமுறை அரசினர் செனற்சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும்போது இலங்கையிலே கல்வி சம்பந்தமான காரியங்களைக் கவனிப்பதற்கென்று செனற்றர் ஒருவரைத் தெரிவுசெய்யும்படியாக அகில-இலங்கை ஆசிரியர் ஐக்கியசங்கம் மகாதேசாதிபதிக்கும், பிரதம மந்திரியாருக்கும் மனுப்பண்ணியிருக்கின்றது. இதுவிஷயமாய் அரசினர் செனற்சபைக்கு அங்கத்தவர்களைத் தெரியும்போது, கல்வி சம்பந்தமான கருமங்களுக்கு அதிகம் முதன்மையளிக்கவேண்டுமென்று சோல்பறிகொம்மிஷன் சிபாரிசுசெய்திருக்கிறதென்றும், சென்றமுறை அரசினர் தெரிவுசெய்த 15 செனற்றர்களிலும் கல்விசம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க எவருமே தெரியப்படவில்லையென்றும் அது எடுத்துக்காட்டியிருக்கின்றது.

—பிரித்தானிய அரசு சப்மறின்கள் எனப்படும் நீர்மூழ்கிக்கப்பல்களை எதிர்த்துப் போராடத்தக்க தீவிரகப்பற் படைக் கூட்டமொன்றைக் கட்டத்திட்டம் போடுகின்றது. இந்தக் கப்பல்கள் கனடாதேசகடற்படை தற்போது கட்டிவரும் கப்பல்களைப்போன்றனவாய் வியாபார, பிரயாணக்கப்பல்களைப் பாதுகாக்கக்கூடியவகையிலே நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன.


# -::: லெக்டோஜன் :::-

உணவை அருந்தும் குழந்தைகள்
எல்லாம் செழித்து வளருகின்றன.



குழந்தை ஆர். பீ. டி. வயது 8 மாதங்கள் : பொறளை

லெக்டோஜனை நாம் ஏன்
"இலங்கைக் குழந்தைகளின் உணவு"
என்று அழைக்கிறோம் என்பதற்கான காரணங்களில் இந்தக் குழந்தையின் செழுமையான வளர்ச்சியும் ஒன்றாகும்.




## லெக்டோஜன்

எல்லா ஸ்டோர்களிலும் கூட்டுறவு டிப்போக்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது.


## செயற்கை அதிசயம்

காலநிலையையும் மனிதன் கட்டுப்படுத்துவது சாத்தியமென்பதைப் பிரித்தானியிலே தற்போது நடைபெற்று வரும் பரிசோதனை நபபச்செய்கின்றது. சிலவிசேஷ இரசாயனப்பொருள்களை உபயோகித்து மழைபெய்யச் செய்வதற்காக நடைபெற்றமுயற்சி வெற்றி அடைந்துள்ளது. இவ்வருடம் கோடைகாலத்தில் ஏற்பட்ட தண்ணீர்க் கஷ்டம் காரணமாகத்தான், பிரித்தானிய தொழில்ஸ்தாபனம் ஒன்று இவ்விதமுயற்சியில் இறங்கியது. இந்த ஸ்தாபனத்தின் பரிசோதனை விஷயமாய் ஞ்ரேயல்விமானபபடை விமானிகளும் விமானமந்திரியின் காரியாலய காலநிலை தெரிவிக்கும் அதிகாரிகளும் ஒத்துழைத்தார்கள். தகுதியான மேகநிலைமைகள் எப்போது ஏற்படுமென்பதைக் காலநிலை நிபுணர்கள் கவனித்து அந்த ஸ்தாபன நிபுணர்களுக்கு அறிவித்தார்கள். அதேசமயத்தில 'டிறைகோல்ட்' எனும் இரசாயனப் பொருள் ஏற்றியவிமானங்கள்விமானத் துறையில் தயாராக நின்றுகொண்டிருந்தன. தகுதியான மேகநிலை ஏற்பட்டதும் இந்த இரசாயனப் பொருள் தரை மட்டத்திலிருந்து 10,000 அடிக்குஉயரத்திலே மேகங்களினூடே தூவப்பட்டது. விமானம் அந்த மேகத்தைத்தாண்டிக் கீழேவருவதற்குள் மழைபெய்யத் தொடங்கிவிட்டது.

இரசாயனப் பொருளைத் தூவிய ஐந்து நிமிஷங்களுக்குப்பின் மழைபெய்யத் தொடங்கியதெனப் பூமியிலிருந்துபார்த்தார் அறிவித்தனர். இந்த ஆரம்ப பரிசோதனையைத் தொடர்ந்து அதிகப்படியான 'டிறைகோல்ட்'களுடன் இரண்டாவது சோதனை ஒன்றும் நடத்தப்பட்டது. இம்முறையும் இரசாயனப்பொருள் அதேஉயரத்தில் தூவப்பட்டது. ஏழு நிமிஷங்களுக்குப்பின் கருமேகங்கள் காணப்பட்டன. பன்னிரு நிமிஷங்கள் கழிந்து வானவில்லும காணப்பட்டது.

## சர்வதேச லூர்துபதியாத்திரை

34 தேசங்களைச்சேர்ந்த 20,000 யாத்திரிகர் சமீபத்திலே லூர்துதிருப்பதியில் ஒன்றுகூடி மூன்று தினங்களாக உலக சமாதானத்துக்காகச் செபஞ்செய்துகொண்டார்கள். இந்த யாத்திரிகரெல்லாம் கிறீஸ்துவின் சமாதான சர்வதேச மகாநாட்டிற்குச் சமுகங்கொடுத்தவர்களாவர். இரும்புத்திரைநாடுகளின் பிரதிநிதிகளாக இடம் மாறிய பேர்களே சமுகமானார்கள். வட இத்தாலியிலிருந்து மிலான்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் சூஸ்றர் ஆண்டவர் ஆயிரம்யாத்திரிகருடன் சமுகமாயிருந்தார். மகாநாடு லூர்துபதித் திருக்ஷேத்திரத்திலே தூலூஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் சலியேஜ் ஆண்டவராலும் லூர்துநகர் மேற்றிராணியாரான தியெஸ்ஆண்டவராலும் திறந்துவைக்கப்பட்டது. ஈருந்ததிருச்சடங்குகளை லையன்ஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஜேர்லியர்ஆண்டவர் நடத்தினர்.

—சமீபத்திலே சீனதேச ஷாங்காய், பென்யாங், கியற்றிங், சூச்சோ மேற்றிராசனங்களுக்குச் சீனமேற்றிராணிமார் நியமனஞ் செய்யப்பட்டதோடு சீனவிலே சுதேசமேற்றிராணிமார் தொகை 25 போகியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரும்புத்திரைக்குப் பின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. மேற்றிராசன ஆளுகை, பங்குக்குருமார் நியமனம் முதலியன இந்தக் கெசற் வழியாய்த் தான் நடைபெறுமாம். குருமாருக்கும், அவர்கள் கிறீஸ்தவர்களுக்கும் வேண்டிய ஞான ஆலோசனைமுதலாய் இப்பத்திரிகை கொடுக்குமாம்.

செக்கோசிலோவாகியாவின் முதன் மேற்றிராணியார் மகாவந். பெரான் ஆண்டவர் வைகாசிமாதமுடிவில் தமதுகுருமார்களுக்கு விடுத்தநிருபத்தில் இப்பொதுவுடைமை அரசாங்கத்தின் "கத்தோலிக்கசேவை"யில் ஈடுபடும் குருமாரும் "கத்தோலிக்க குருமாரின்கெசற்"றை வரவழைப்பவர்களும் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படுவாரென எச்சரித்தார். ஆனிமாதம் 14-ந் திகதியன்று அரசாங்கஉத்தியோகஸ்தர் அதிமேற்றிராணியாரின் அரண்மனையைப் பலவந்தமாகக் கைப்பற்றிக்கொண்டனர். அடுத்த நாள் அவசரமாகக்கூடிய மேற்றிராணிமார் கூட்டம்முடிய, பொலிஸ்உத்தியோகஸ்தர்கள் சென்று சாவிகள் அனைத்தையும் கைப்பற்றி வீட்டைச்சோதனைசெய்தனர். 18-ந்திகதி பெரான் ஆண்டவர் தமது பிரசங்கத்திலே "ஒருவேளை சீக்கிரம் நம்மைப் பற்றி றேடியோவில்பலவிஷயங்கள் கேள்விப்படுவீர்கள்.... நாம் குற்றங்களை ஒப்புக்கொண்டதாக அல்லது அரசாங்கத்தோடு புதிய உடன்படிக்கை செய்துகொண்டதாகக் கேள்விப்படுவீர்கள்.... திருச்சபையினுடையவும் மேற்றிராணியாருடையவும் உரிமைகளை அபகரிக்கும் உடன்படிக்கைக்கு நாம்ஒருபோதும் சம்மதியோம்... நம்மைநம்புங்கள். கடவுளுக்கும், தேசத்திற்கும்முன்னல் சொல்லுகிறோம். நம்மை அதற்குஇணங்கவைக்க ஒருவராலும்முடியாது. மேற்றிராணிமார்இல்லாத திருச்சபையில் உண்மையானகத்தோலிக்கன் இருக்கமுடியாது." எனக் கூறினார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிமேற்றிராணியார் தமது பூசையில் பிரசங்கம்செய்ய முயன்றார். பொதுவுடைமைவாதிகள் 250 பேர் கோவிலுள் நுழைந்து காலித்தனம்செய்து பிரசங்கம் செய்யாதபடி அவரைத் தடுத்து விட்டனர். அதேசமயத்தில் மற்றக்கோவில்களில் மேற்றிராணிமாரின் கூட்டுநிருபம்ஒன்று வாசிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அடக்குமுறைகளை எடுத்துக்கூறி, இப்பதித "கத்தோலிக்கசேவையை"க் கண்டித்தது அந்நிருபம். "ஒவ்வொரு செக்கோசிலோவாகிய கத்தோலிக்கனும் தன்னைப்பரீட்சிக்கும்நேரம் வந்துவிட்டதென உணரவேண்டும். மத சுதந்திரவிஷயத்தில் விட்டுக்கொடுத்தல் முடியாதகாரியம். ஏனெனில், அதுநமது அழியாத ஆத்துமத்தின் நித்திய இரட்சணியத்தைப் பற்றியவிஷயம்."

நாடகம்வேகமாகச் செல்லுகிறது. உச்சிநிலையை நெருங்குகிறது. யேசுவின் திருஇருதயம் தான் இந்தநெருக்கடியில் செக்கோசிலோவாகிய மக்களுக்கும், அதன் ஞானத்தலைவர்களுக்கும் வேண்டிய தைரியத்தைக் கொடுக்கவேண்டும். (தி. இ. தா.)

## "சோடிழந்த அன்றிலைப் போல்"

கடவுளின் எண்ணற்ற சிருஷ்டிகளாகிய சீவனங்கள்எல்லாம் இயல்பாகவே ஒவ்வொருவகையில் சிறப்பான வாழ்க்கை நடத்திவருகின்றன. மனிதன் தன் இயற்கை அறிவுடன் செயற்கை அறிவையும் சேர்த்துச் சீராகவாழ்வதாக நினைந்து பெருமைகொள்கிறான். ஆனால், உண்மையை ஆராயுமிடத்து மனிதவல்லமை ஏனையபிராணிகளின் இயற்கை வன்மையினும் குறைவுபட்டதே என்று புலப்படுகிறது. அன்றில்பட்சிகளின வாழ்க்கை இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

இலங்கையின் மாமடர்ந்த காட்டுப் பகுதிகளில் அன்றில்பட்சிகள் சோடுசோடாக வாழ்கின்றன. சித்திரை, வைகாசி மாதங்களின் இடைக்காலங்களில் அவைகள் முட்டையிடும் பருவமெய்துகின்றன. அப்போது பெண்பட்சியான அன்றிலும், ஆண்பட்சியான அகன்றிலும் கொடிகள்பின்னிய மரக்கிளைத் தொகுதியைக் கூடமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கும். புல்லும் தண்டும்சேர்த்து, வேடர்கட்டும் காவற்பரண்போன்றுவீடமைத்ததும்இளகிய களிமண் கொண்டு எல்லாப்பக்கமும் அழுத்தமாக மெருகிடப்படுகிறது. வாய்ப்புறம்மட்டும் பெரிதாக விடப்பட்டுக் குறைவேலையாய் இருக்கும். அன்றில் முட்டையிடும்தினம் வருமுன்னமே வீட்டினுள் தும்பு தூசி பஞ்சு போன்றவைகளால் மெத்தையிட்டு முடிக்கும். முட்டையிடும் தினத்தில் ஆண் அகன்றில் இளகிய மண்ணை ஆயத்தமாய் வைத்திருந்து அன்றிலைக் கூட்டுள்விட்டுத் தலைமட்டும் வெளிவரக்கூடியதாக வாயைச்சிறிதாக்கி அடைத்துவிடும். அன்று தொடக்கம் அன்றில் அந்தக் கூட்டினுள் தான்இட்ட இருமுட்டைகளையும் அடைகாத்துக்கொண்டு உஷ்ணம் முதலிய இயற்கைகளால்வருந்தி ஒரு இறகும் பாக்கியில்லாது முழுஇறகும் உதிரப்பெற்றுவிடும். 21-ம் நாள் தன் குஞ்சுகளைக் கண்டுமகிழும்.

அடுத்த 65 அல்லது 70 நாட்களுள் மீளவும் அதன்இறகுகள் பூரணமாய் முளைத்துவிடும். அப்போது குஞ்சுகள் சுயமாகவாழும் இயல்பைப்பெறுகின்றன. இதனைத் தாயாகிய அன்றிலும், தந்தையாகிய அகன்றிலும் உணர்ந்ததும் தங்கள் மக்களின் சிற்றுதவியுடன் கோட்டைபோன்றிருந்த அக்கூட்டைக் குலைத்தெறிகின்றன குஞ்சுகள்இரண்டும் ஒருசோடியாகவும், பெற்றோர் மற்றொரு சோடியாகவும் வாழ்க்கைநடத்தத் தொடங்குகின்றன. முட்டையிட்டதுமுதல் வெளிவரும் நாள் ஈறுகவுள்ள சுமார் 90 நாட்களுக்குயிடையில் ஆண் பட்சிக்குக் காவல்வேலையும, உணவூட்டும்வேலையும் அதிக கஷ்டத்தைக்கொடுக்கும். இந்த இடைக்காலத்தில் ஆண் பட்சிக்கு எவ்வாறுகவேனும் இடையூறு சம்பவித்து அது உயிர்துறந்தால் சோடிழந்த அன்றிலின் துயர் எவ்வாறாகும். அந்தோ! மனதினால் நினைக்கமுடியாத அத்தனைகஷ்டமும், துயரமும் ஆதற்கு நேரும். அது உணவின்றி வாடிவதங்கி உயிரிழக்கின்றது அன்றில் தன்கணவனைப்பிரிந்ததால் சோகமுற்று நைந்துருகி இறக்கின்றது. இத்துணை பெரும் துன்பநிலையைக் கண்டறிந்த முன்னோர்கள் தமது அனுபவத்தை என்ன அழகாக; எத்தனை நுட்பமாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்! "சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானேன்......வந்து இரட்சிப்பாயே" என்று இறைவனைக் கூப்பிடுகின்றார். அன்றிலின் பிரிவுபோன்று ஆண்டவனைப் பிரிந்திருப்பதை உள்ளூர அனுபவித்த அப்பெரியாரின் வாக்கை இன்று நாம் இப்பட்சிகளின் வாழ்க்கையால் அறிகிறோமன்றோ!


## விளம்பரம்

வடமாகாணம், கிளிநொச்சி, 10-ம் வாய்க்கால் அரசாங்கக்கட்டிட வேலைக்கு நாலாயிரம் புசல் திறம் சூளைச்சுண்ணும்பு ஒப்படைக்க வடமாகாண உதவி அதிபர் 1949-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

குறித்த விண்ணப்பப்பத்திரங்களை ரூபா இருபத்தைந்து (ரூபா 25/-) கச்சேரியில் கட்டி வடமாகாண ஏசண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமாக ரெண்டர் 1949-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிவரைக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறுவிபரங்கள் வடமாகாண உதவி அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் பூநகரி-துணுக்காய்ப்பகுதி துணுக்காய்க் கிராமத்தில் கொல்லன்குளத்திற்குத் தேவையான திருத்தங்கள் செய்வதற்கு வடமாகாண ஏஜண்டரவர்கள் 1949-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

குறித்த விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 25/- கச்சேரியில்கட்டி வடமாகாண ஏஜண்டரின் கையொப்பம் இட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமாக ரெண்டர் 1949-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 24-ம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மறுவிபரங்களை வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## காணிக்கந்தோர்—கச்சேரி, யாழ்ப்பாணம்

### தண்ணீர் பாய்ச்சும் இயந்திரங்கள் ஏல விற்பனை

எட்டு தண்ணீர்ப் பாய்ச்சும் இயந்திரங்களும் (Coventary Climax Godiva Make) ஒவ்வொன்றும் 15 அடி நீளமுள்ள தண்ணீர் இழுக்கும் குழாய்களுடனும், 9 தண்ணீர்விடும் குழாய்களுடனும் யாழ்ப்பாணம் கச்சேரி விற்பனைக் கட்டிடத்தில் செப்ரம்பர் மாதம் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

*Sgd.* E. J. இராசரத்தினம்,
வடமாகாண அதிபருக்காக.

கச்சேரி,
யாழ்ப்பாணம், செப்டம்பர் 8, 1949.

## வேத புத்தகங்கள்

| | |
|---|---|
| அர்ச். சூசைதார்சின்சரித்திரம் | 2-00 |
| ஞானமிர்த தடாகம் | 2-75 |
| ஞானஉபதேச தடாகம் | 2-75 |
| பிரதானமந்திரங்களின் வியாக்யானம் | 2-25 |
| தேம்பாவணி (3 காண்டம்) | 15-50 |
| திருவருஷம் | 3-75 |
| மாதாவின் மாலை ஆராதனை | 0-25 |

**தாமஸ்ரொட்றீகோ அன்சன்ஸ்,**
புத்தகவியாபாரிகள்,
கொழும்பு—13.


—ஜெருசலேம் நகரின் எல்லைகள் மேற்குப்புறமாக விசாலமாக்கப்பட்டிருப்பதாகவும், அதனால ஜெருசலேம் நகரசங்க எல்லையில் அடங்கியிருந்த பகுதியின் தற்போதைய விஸ்தீரணம் ஏறக்குறைய இருமடங்காகி 8,000 ஏக்கரைக் கொண்டிருப்பதாகவும் அதன் மேயரான திரு. டேனியல் ஒஸ்றர் தெரிவித்திருக்கின்றார்.

## பொதுவர்த்தமானம்

### தென்கோறியாவின் குற்றச்சாட்டு

புரட்டாசிமாதம் முடிவதற்குள் தென்கோறியாவைத் தாக்கவேண்டுமென்று வடகோறியாவின் பொதுவுடைமை அரசாங்கத்துக்குச் சமீபத்திலே ருஷியசோவியற்அரசு கட்டளையிட்டிருந்ததாகத் தென்கோறிய அரசாங்க அதிகாரிஒருவர் சென்ற 3-ந் திகதி சனிக்கிழமை பிரசித்தமாக அறிவித்திருக்கின்றார். தென்கோறிய சேனை அறிக்கையிட்டுள்ளபடி, இம் மாதமுடிவிற்குள் வடகோறிய அரசாங்கம் இந்தத்தாக்குதலை நடத்தவில்லையாயின் அதற்கு யுத்தோபகரணங்கள் உதவுதலை நிறுத்திவிடுவதாகச் சோவியற்அரசு அச்சுறுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். தென்கோறியாவின் எந்தப்பகுதியிலாவது இந்தப் புரட்டாசிமாதத்திலே உள்நாட்டுப்பொதுவுடைமைக்காரர்யாதும் புரளிபண்ணுமல்தடுத்து வைக்குமாறு புதிய பாதுகாப்புத்திட்டங்களைவகுத்துப் பொலிஸ்பட்டாளத்தை நிறுத்தியிருப்பதாக அதன் உள்நாட்டுமந்திரியாரான ஹிம்ஹைசுக் தெரிவித்திருக்கின்றார்.

### அணுக்குண்டிலும் கொடியது

"கிருமிகளைக்கொண்டு உற்பத்திசெய்யப்படும் ஓர்சக்தியினால் அணுக்குண்டு இப்போது பயனற்ற ஓர்ஆயுதமாகிவிட்டது; உலகில் மனிதவர்க்கத்தையே கொன்றழித்துவிட இந்தச் சக்தியில் ஏழுஅவுன்ஸ் இருந்தாலே போதும்;" என்று உலகசுகாதார ஸ்தாபனத்தின் பிரதமதலைவரும், கனடாவைச் சேர்ந்தவருமான டக்றர் பிறுய்க் சிசோம்அவர்கள் சென்ற 10-ந் திகதி சுவிற்சர்லாந்துதேச செனிவா நகரில் கூறியிருக்கின்றார். மேலும் அவர் கூறியதாவது: "அணுக்குண்டு உபயோகமற்ற ஓர் ஆயுதமாகிவிட்டது. கிருமிகளைக்கொண்டு செய்யப்படும் சர்வபரிநாச ஆயுதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அணுக்குண்டை ஓர்விளையாட்டுக் கருவியென்றே சொல்லவேண்டியிருக்கிறது. அணுக்குண்டின் காலம் கடந்துவிட்டது. இந்தக் கிருமிஆயுதங்கள்மூலம் உன்மத்தங் கொண்டசிலரால் மனிதவர்க்கத்தையே பூண்டோடு அழித்துவிடலாம். இந்தயுத்தத்துக்கு ஆட்பலம்தேவையில்லை. பாரிய கைத்தொழில்கள்செய்யும் ஆயுதங்களும் தேவையில்லை." சமாதான ஸ்தாபனங்களின் உலகசங்கத்தில் பேசும்போதே அவர் இவ்விதம் கூறலாயினர். இச் சங்கம் ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அரசாங்கசார்பற்ற ஓர் ஸ்தாபனமாகும்.

—அமெரிக்க ஐக்கியதேச அத்திலாந்திக்நகரின் இரும்புத்துறைமுகப்பாலத்திலே கடலின்கீழ் முப்பதுஅடி ஆழத்தில் இருந்த சமுத்திரஆராய்ச்சிக் கப்பல் ஒன்றில் இம்மாதம் 1-ந்திகதி 21 வயசுடைய லூயிஸ் வில்லாஹி என்பவருக்கும், 17 வயசுள்ள றூத் எலியாஸ் என்றமாதுக்கும் விவாகம் நிறைவேறியது. உலகிலேகடலின்கீழ் நடைபெற்ற முதல்விவாகம் இதுதானும்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தாலும் பரிசுத்தபத்திமாதாயாருடைய மன்றாட்டினாலும் நான் நினைத்த காரியமும் என்வேண்டுதலும் கிடைக்கப்பெற்றேன். இவர்களுக்கு என்றும் நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

Mrs. S. Joseph

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 15 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org